


அமரர்கள்

திரு. சண்முகநாதன் ஆனந்தராசா

பேரன் தயாபரன் லதுமிலன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# ஆனந்தலது மலர்

12.08.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# திரு.சண்முகநாதன் ஆனந்தராசா
# பேரன் தயாபரன் லதுமிலன்

இல:32,இராஜவீதி நல்லூர்

## அவர்களின் ஞாபகார்த்த

# ஆனந்தலதுமலர்

## 12.08.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

இத் தரணியில் அன்பு சுரந்து

இல்லறத்தை நல்லறமாக்கி

வாசம் குன்றா வாழ்வு தந்து

வளர்ச்சிக்கு வழி காட்டினீர்

திரும்பும் இடமெல்லாம் நினைவு தந்து

ஆண்டவன் நிழலில் அமரத்துவம் அடைந்த

எங்கள் அன்புத் தெய்வமே!

உங்கள் பாதம் பணிந்து வணங்கி

கண்ணீர்ப் பூக்களால் அர்ச்சித்து

இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

*ஓம்சாந்தி, சாந்தி, சாந்தி*

**குடும்பத்தினர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

பிறப்பு
08 . 05 . 1953



இறப்பு
05 . 07 . 2015

அமரர்

# திரு சண்முகநாதன் ஆனந்தராசா அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு மன் மதவதனி லானதொடு ஆனி வரு பூண்ட
அபரபக்க திருதியை திதிதனில் - நீண்டபுகழ்
தேடிச் சிறந்த திரு. சண்முகநாதன் ஆனந்தராசா
நாடினான் ஈசன் கழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்.

அன்னை மடியில்
12 . 02 . 2000



ஆண்டவன் திருவடியில்
13 . 07 . 2015

அமரர்

# தயாபரன் லதுமிலன் அவர்கள்

## திதி நிர்ணய வெண்பா

ஆண்டு மன் மதவதனி வானதொரு ஆனியிலே
பூண்ட அபரபக்க திரியோதசியில் - வேண்டுமருள்
சேரும் லதுமிலன் தான் சேர்ந்தானே ஈசனடி
ஊரும் உறவும் அழ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோத்திரப் பாக்கள்



### *பஞ்சபுராணம்*

## விநாயகர்துதி

*திருச்சிற்றம்பலம்*

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

## திருவாசகம்

யானே பொய்என் நெஞ்சும்
பொய்என் அன்பும்பொய்
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின்
தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன்
உனைவந் துறுமாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர் போ லகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம் விளங்க
அன்னநடை மடவாளுமைகோ னடி யோமுக்
கருள் புரிந்து
பின்னைப் பிற வியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

இறவாத இன்ப அன்புவேண்டிப் பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமைவேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல கலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின் பதந்த
        தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
        லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
        தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
        சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
        தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
        வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
        கனதனக் குன்றுமைப்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
        சகல கலாவல்லியே!

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
        தார்த்துன் னருக்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
        லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
        கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
        சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல் வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவலியே!

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகவும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவலியே!

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!


பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் கடிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும் வண்ணங்
காட்டும் வெள்ளோதிமப்பேடே
சகல கலாவல்லியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்லவித்தை யுத்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால்
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருங்செல்வப் பேறே
சகல கலாவல்லியே!

சொற்கும் பொருட்கு முயிராமெய்
ஞானத்தின் றோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரதின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவலியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்ப்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன்போற்
கண்கண்ட தெய்வம் உளதோ
சகல கலாவல்லியே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சண்முக நாதன் ஆனந்தராசா அவர்களின் வாழ்க்கை வரலாறு

யாழ்ப்பாண அரசின் இராஜதானியாக விளங்கிய நல்லூரிலே பல்வளம் பல்கும் கல்வியங்காடு எனும் திருப்பதியிலே பிரபல வர்த்தகராக விளங்கிய செங்குந்த குலதிலகர் உயர்திரு வேலுப்பிள்ளை சண்முகநாதன் பாக்கியம் தம்பதிகள் செய்த பெரும் பாக்கியத்தால் 08.05.1953 அன்று ஆனந்தராசா அவர்கள் இந்த மண்ணுக்கு வந்துதித்தார். ஆனந்தகுமார், சித்திரா, சுபத்திரா, ஆனந்தநாதன், சந்திரா, அருணா, சுகுணா, மஞ்சுளா ஆகியோர் இவரது உடன் பிறப்புக்களாவர்.

சகோதரர்களுடன் கூடிக்குலாவி குதூகலித்து என்றும் மகிழ்வுடன் வாழ்ந்தார். இவ்வுலகில் கல்வியதனில் சிறந்திட ஆரம்பக்கல்வியை நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலத்தி லும் பின்பு செங்குந்த இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்றார். ஆசிரியர்களுக்கு மிகவும் பிடித்த மாணவ னாய் திகழ்ந்தார்.அன்னார் தன் பாடசாலை காலத்தின் பின் சிறிது காலம் யாழ் மாநகர சபையிலும் பணி புரிந்தார்.

எண்ணை மில் உரிமையாளரான அன்னாரின் தந்தையார் நாடறிந்த தொழிலதிபர் ஆவார். அன்னார் அவரின் வழியில் தானும் தம் தொழிலை குல தெய்வமாய் நினைத்து பின்பற்றி வந்தார். அத்துடன் சிறுவயதில் வாகனத்தில் மோகம் ஏற்பட்டது. அதனால் நுணுக்கங்களையும். அதனை ஓட்டும் அனுபவமும் பன்னிரண்டு வயதிலிருந்து ஆரம்பித்து அன்னார் தனது இறுதி மூச்சுவரை வாகனத்துடனே வாழ்ந்தார். வாகனத்தின் மேல் ஏற்பட்ட பிரியத்தால் அன்னாரின் பாதை மாறியதால் அவரின் அரசாங்க வேலையை விட வேண்டி நேரிட்டது. அவரின் சிந்தனை, செயல், மனம் யாவும் வாகனத்தைப் பற்றியதாகவே இருந்தது இதனால் சிறந்த சாரதியாகவே உள் நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் பாராட்டப்பட்டவர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் தமது உறவினரான கொடிகாமம் பிரபல சித்த ஆயுள் வேத வைத்தியர் செல்லத்துரை வல்லாம்பிகை தம்பதியினரின் புத்திரி இந்திரா தேவியை இனிதே விரும்பி மணம் முடித்து இல்வாழ்வில் இணைந்து இன்புற்று வாழ்ந்தார். அவ்வாறு வாழ்ந்து வரும் நாளில் தன் குலம் தழைக்கவென மீரா, அகிலன், கஜன் என்போரைப் பிள்ளைகளாகவும் பெற்று முறையே தயாபரன், அனுசூயா, ராமலக்ஷ்மி என்போரை மருமக்களாகவும் கண்டு மகிழ்ந்து வந்த அன்னார். இவருக்கு கீர்த்திகா, லதுமிலன், டிசான் ஆகிய மூன்று பேரக்குழந்தைகளுடன் சிறிது காலம் கொழும்பில் தன் நேரத்தை செலவிட்டு மகிழ்ந்தார்.

செய்யும் தொழிலே தெய்வம் என்ற திவ்விய வாசகத்திற்கேற்ப தமது தொழிலை உண்மை, நேர்மை, கடமை இவற்றுடன் திறம்படச் செய்து வந்தார். பின்பு குடும்பத்தின் தேவைக்காக வெளிநாடு செல்ல முடிவெடுத்த அன்னார் 1980ம் ஆண்டு பாஹ்ரேனுக்கு புறப்பட்டார். அங்கு (U.S Navy) என்ற பிரபல கம்பனியிலே சாரதியாக பணியாற்றி அந்நிறுவன உயர் அதிகாரிகள் பொறியிலாளர்கள் நன்மதிப்பைப் பெற்றார்.

அதே நிறுவனத்தினால் குடும்பத்துடன் பாஹ்ரேனில் வசிக்க அனுமதித்தனர். நான்கு ஆண்டுகளுக்கு மேலாக குடும்பத்துடன் வசித்து வந்த அன்னார் கடைசிமகனை அந்நாட்டினிலே பெற்றேடுத்தார் 20 வருட வெளிநாட்டு வாழ்க்கை திகட்டிடவே ஆனந்தராசா பிறந்த மண்ணில் தான் தன் கடைசி காலம் என எண்ணி தான் பிறந்த மண்ணுக்கே திரும்பி வந்தார். வந்த அன்னார் தன் தந்தை வழித் தொழிலை தன் தம்பியுடன் இணைந்து திறம்படச் செய்து வந்தார். அக்காலங்களில் அன்னார் எல்லோருடனும் அன்பாகப் பழகுவதுடன் எல்லோருக்கும் உதவிகள் செய்வதிலும் தன் தந்தை, தாயை மிஞ்சியவராக திகழ்ந்தார். இவரை எல்லோரும் "கப்பல்" என்று செல்லமாக அழைக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் குடும்பத்துடன், உற்றார் உறவினருடனும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வரும் பொழுது பாழும் விதி வந்து பாதியில் வழிமறித்தது போல் நோய் வாய்ப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். நாடு போற்ற நலம் சிறக்க வாழ்ந்த அன்னார் சிகிச்சையளித்தும் பயனில்லை என்று எண்ணி இவ்வுலக வாழ்வு போதும் என்று இறைவன் பாதம் செல்ல முடிவெடுத்தார். அதற்கிடையில் தன் உயிர் மூச்சாய் நேசித்ததன் பேரன் லதுவை எண்ணி அவர் கலங்காத நாளில்லை. அதன் விளைவோ தெரியவில்லை தம்முடன் கூட்டிச் செல்ல எண்ணிய அன்னார் 09 நாட்களுக்குள் பேரனையும் கூட்டிச் சென்றார்.

அன்னார் ஓலைதனை சித்திர புத்தினார் சீராகத்தான் பார்த்து விட்டார் போலும், இனி உனக்கு இவ்வுலக வாழ்வு போதும் என்று அன்பாக அழைத்திடவே மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் கதறியழ, சகோதரர்கள் கலங்கிநிற்க, நண்பர்கள் கூடி அழ போய் வருகிறேன் என்று பேத்தி, ஆச்சிபாதம் போய்ச்சேர்ந்தார் புண்ணியனார்.

அமரர் ஆனந்தராசா அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனைவி புலம்பல்

**உம் நினைவுகள் தொடர்ந்து வரும் .........**

உமை நான் காதலித்த நாள் முதலாய்
கை தவற விட்டதில்லை - இன்று
பாதியிலே எனை நீங்கள்
பரிதவிக்க விட்டுவிட்டீர்
நான் கோயிலுக்கு கொடுத்த தெல்லாம்
இன்று கூட வரவில்லை ஐயா
கலங்கி மனம் தவிக்குதையா

கடல் கடந்து திரவியம் தேடச் சென்றதும்
நான்கு வருடங்கள் நாம் வெளிநாட்டில் வாழ்ந்ததும்
கனவிலும் நினைவிலும் அடிக்கடி வருகுதையா
என் மனம் வருந்தவிடவுமில்லை
வாழ்க்கையிலே ஓர் குறையுமில்லை
உடன் இருந்து உறுதி தந்தாய் - எனக்கு
வற்றாத அன்பைத் தந்தாய்.

குங்குமம் தலையிழந்தேன்
கொடிசேர் தாலியிழந்தேன்
உங்கள் அன்புத் துணை இழந்தேன்
புவிமேல் ஆதரவும் நான் இழந்தேன்
கலங்கி அழுகின்றேன்
மனம் ஆற மறுக்குதையா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெட்ட குடிப் பழக்கம் ஒன்று
உங்களிடம் வந்ததனால்
"என்ராசா" உங்களை நான்
இடை நடுவில் பிரிந்து விட்டேன்.

நான் இல்லாக் காலத்தில்
என்ன செய்வாய் நீ என்று
இயலாத நேரத்திலும்
மறவாமல் கேட்டீரே

பயணம் தூரமென்று
பாதியிலே போனீரோ?
பாவி நான் தவிக்கின்றேன்
என் பரிதவிப்பை காணலையோ?

நீண்ட தூரம் சென்ற போதும்
என் நினைவினிலே வாழ்ந்திடுவீர்
உம் நினைவாய் நான் என்றும்
உம் நிழலாய் வாழ்ந்திடுவேன்

மனைவி

ஆ.இந்திராதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நினைவலைகளில் மைத்துனர் ஆனந்தராசா

பண்பின் உருவாய்
பாசத்தின் வடிவாய்
பழகுவதற்கு இனியவராய்
நெடிய தோற்றமுடன்
நிமிர்ந்த பார்வையுடன்
கனிவுறு பேச்சுடன்
கள்ளமில்லாச் சிரிப்புடன்
எங்கள் குடும்பத்தில் ஒருவராய்
ஏற்றமுடன் வாழ்ந்த மைத்துனரே
எமையெலாம் கலங்க வைத்து எங்கு சென்றீர்
புலம் பெயர் வாழ்வு தூரமாய் எங்களை வைத்தாலும்
பாச நினைவுகள் நெஞ்சமதில் பாரமாய் கனக்கின்றன.
Bharain இல் நீங்கள் இருந்த நாட்களில்
நான் சவூதியில் இருந்து உங்களிடம் வந்து கழித்த
பொழுதுகளை எண்ணிப் பார்க்கின்றேன்.
ஒருயிராய்க் கலந்து விட்ட என் தங்கை இந்திராவையும்
இனிய செல்வங்கள் மீரா அகிலன் கஜனையும்
மருமக்கள் பேரப்பிள்ளைகள்
சகோதர சகோதரிகள் மைத்துன மைத்துனியர்
குடும்பத்தினரையும் பிரிந்து விட்டீர்கள்
நீங்கள் பிரிந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் இதயமதில் என்றும் நிலைத்து நிற்கும்
இறைவனடியில் ஆத்மசாந்தி பெற்றிடுங்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மைத்துனர்
சிவகுருநாதன் (இலண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அப்பா நாம் அழுங்குரல் கேட்கின்றதா?

அப்பா நீங்கள் எம்மை விட்டு மறைந்தமையை நம்மால் நம்ப முடியவில்லை? அப்பா நீங்கள் இருப்பதாகவே உணர்கின்றேன் அப்பா உங்களுடன் 03.07.2015 அன்று தொலைபேசியில் உங்களை கஜன் காண்பித்த போது அப்பா நான் உங்களுடன் கதைத்தேன் அந்நேரம் நான் நினைத்தேன் நீங்கள் குணமாகி வீட்டுக்கு வந்து விடுவீர்கள் என்று ஆனால் எல்லோரையும் கடும் துயரில் ஆழ்த்திவிட்டு சென்று விட்டீர்களே அப்பா. அப்பா நான் உங்களுடன் இறுதியாக தமிழ் நாட்டில் இருந்த காலங்கள் என்றும் என்னால் மறக்கமுடியாது. அப்பா நான் உங்களை ஏதாவது கோபப்படுத்தியிருந்தால் என்னை மன்னிக்குமாறு கேட்கிறேன் அப்பா காரணம் உங்கள் உடல் நலமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் அப்பா நாங்கள் உங்கள் மேல் வைத்த பாசத்தை எவராலும் தீர்க்க முடியாது... அப்பா என்றும் உங்கள் நினைவில் நாங்கள் ...

மாமா

அன்போடு எனைப்பேணி ஆதரவாய்க் காத்து
எல்லை இல்லாத அன்பை என் மீது சொரிந்து
எண்ணி எண்ணி ஏங்கவைத்து எங்கு மாமா சென்றீர்கள்.

உங்கள் அன்பு
மகன்,மருமகள்
ஆ.அகிலன்
அனு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அப்பாவே உமது ஞாபகங்கள்

பாரேனில் என்னை பெற்றெடுத்து அங்கு வைத்து பாராட்டி, சீராட்டி வளர்த்தெடுத்து பின்பு எமது சொந்த மண்ணான கொடிகாமம் தன்னில் வந்தமர்ந்து எங்களை பாடசாலை சேர்த்ததை மறப்போமா? பின் தொழில் நிமித்தம் திரும்பி பாரேன் செல்ல நாம் இடம் மாறி கொழும்பில் வீடெடுத்து பாடசாலை சேர்த்து விட்டு போனீர்களே. இவற்றை எல்லாம் மறக்க முடியுமா? அது மட்டுமல்ல எங்களை கண்டி, கதிர்காமம், போன்ற புண்ணிய ஸ்தலங்களுக்கும் கூட்டிச் சென்றீர்களே. எங்கள் சுமைகளை உங்கள் சுமையாய் நினைத்து எங்களை சுமந்த நீங்கள் இன்று இவ்வுலகில் இல்லை என்று நினைக்கும் போது மனம் வெடிக்கிறது. அப்பா ஏன் இந்த அவசரம். எங்களை தவிர்க்க விட்டுப் போனதேனோ?

நீங்கள் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் நான் உடன் ஒடி வந்து நீங்கள் கிடந்த கோலத்தைப் பார்த்து எனக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. ஒரு மகனால் உங்கள் பணிவிடைகளை திருப்தியுடன் செய்தேன். நீங்கள் குணமாகி விடுவீர்கள் என்று நம்பினேன். ஆனாலும் ஏமாற்றி விட்டீர்கள் அப்பா ஏன் எங்களைத் தவிக்க விட்டுச் சென்றீர்கள். உங்களைப் பார்த்துத்தானே நான் வாகனம் ஓட்ட கற்றுக் கொண்டேன் எனக்கு எல்லாவற்றையும் கூறி வழிகாட்டி விட்டுச் சென்று விட்டீர்களே. நீங்கள் அப்பா மட்டுமல்ல என்னுடைய சிறந்த நண்பன். சிறந்த ஆலோசகர், மொத்தத்தில் சிறந்த ஒரு ஆசான் நீங்கள். எங்கள் பரம்பரையும் அதிக மொழி தெரிந்த ஆள் என்றால் அது நீங்கள் தான் அப்பா. வாகன தொழில் நுட்ப அறிவிலும் நீங்கள் ஒரு மேதை. இப்படி உங்கள் திறமையை சொல்லிக் கொண்டே போகலாம். நாங்கள் எங்கு சென்றாலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உங்கள் நினைவுகள் மீண்டும், மீண்டும் வந்து கொண்டே இருக்கும். அப்பா நீங்கள் இறுதியில் வழங்கிய ஆலோசனையின்படி உங்கள் ஆசைகளை நிறைவேற்றுவேன். அப்பா உங்கள் ஆத்மா நல்லூர் கந்தன் பாதமடைய பிரார்த்திக்கின்றேன்.

**அன்பு மகன்**
**சஜன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமா உங்களையும் மரணம் பறித்ததோ?

உங்கள் வீட்டில் முதல் மருமகளாக வந்த என்னை பொங்கிடும் உங்கள் அன்பால் மகளாக மாற்றினீர்களே? அன்பான வாழ்வு வாழ்ந்து அருமையான மாமாவே காலைவேளை தனில் உங்கள் குரல் கேட்டு எழுந்திடுவேன். லக்சுமி, லக்சுமி என்றழைக்கும் நீங்கள் சிறிது காலமாக அழைக்கவில்லையே? உங்கள் குரல்கேட்க வந்த எனக்கு வைத்தியசாலையில் படுத்திருந்த கோலத்தைப் பார்க்க முடியவில்லை மாமா. மாமா என்று மனதார அழைத்தேனே. இனியாரை அழைப்பேன் மாமா மறந்தும் யாருக்கும் தீங்கு செய்ய மாட்டிர்கள். நிறைந்த மனதில் நிதமும் எல்லோரிற்கும் உதவி செய்வீர்களே. உங்களுக்கு மருமகளாய் வந்தது என் பாக்கியம் உங்கள் ஆத்மா இறைபதமடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். எங்கள் குலதெய்வமாய் எங்களைக் காத்திடுங்கள்.

**உங்கள் அன்பான மருமகள்**
**லக்ஷ்மி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My dearest Ammappa!!

**Ammappa, I came a long way from Colombo to know your health conditions. I never thought that you will leave me this soon. I can still remember the days when I was small you used to wake me up in late night and gave me Elephant House Ice- Cream, Who will give me now Ammappa?**

**I always told you to eat properly and take care of you but you never listened. If you would have listened, you would have lived with us happily for some more years. Your memories with us will always last in our hearts.**
**I was soo surprised when I heard about your passion for driving. You are always great and you are my hand some hero Ammappa Forever.**
**We all were worried about your loss, then you took Lathu along with you and made us worried to the most.**

**Ammappa, I always asked many things from you and my final request is to take care of Lathu and feed him properly. I believe that you both didn't go anywhere, you both are always with me.**

**Love you Ammappa, Miss you a lot......**
**May your soul rest in peace Ammappa!!**

**Grand daughter**
**Keetha**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## My Dearest Grand Father

- **We came to Jaffna from Colombo to see you, because you were serious in hospital. But after a few days, you left us why did you leave us and go? When I was small you used to scare me, I always think why does this man do so, but now I realised that it was all your love that you showed in such a ways. You called me in many different funny names. I didn't like it, but now you can't even say my name. When you passed away, I didn't cry because you're always in my heart. May your soul rest in peace.**

**T. Dishan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு அண்ணா

ஐயா,அம்மாவுக்கு அடுத்ததாக எம் குடும்பத்தில்
அதிக பாசத்துடனும் நேசத்துடனும் இருந்தீர்கள்.
எனது சிறு வயதிலிருந்து என் இன்ப துன்பங்களில்
பங்கெடுத்துக் கொண்டீர்கள்.
ஐயாவின் மறைவின் பின் எம் குடும்பத்திற்கு
நல்ல ஒரு வழிகாட்டியாக இருந்தீர்கள்.
எம் குடும்பத்தொழில் சிறப்புற மேற்கொள்ள எனக்கு
பெரிதும் உதவியாய் இருந்தீர்கள்.
அம்மாவின் இழப்பு தீராத கவலையாக இருந்து
மறைந்து கொண்டிருக்கும்போது உங்களின் மரண
செய்தி கேட்டு பேரிடிக்கு உள்ளானேன்.
இத்தனை வருட காலமும் எங்களுக்கு
துணையாகவும் நல்ல ஒரு வழிகாட்டியாகவும்
இருந்து இன்று எட்டாத தொலை தூரத்திற்கு
எம்மை விட்டு சென்று விட்டீர்களே!
உமது இழப்பை இனி யார்தான் ஈடுசெய்வாரோ!
இழப்பின்மேல் பேரிழப்பாக உமது அன்புப்
பேரனையும் கூட்டிச் சென்று விட்டீர்கள்

பிறப்பும் இறப்பும் உலக நியதியே என்று
எண்ணி என்னை ஆறுதல்படுத்திக் கொள்கின்றேன்.

உமது பிரிவில் துயருறும் உங்கள் குடும்பத்தினரது துயரில்
நாமும் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா
இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**இப்படிக்கு உன் பிரிவால் துயரும்**
**அன்புத் தம்பி**
**ஆனந்த குமார் (*சின்னக்கிளி*)**
***சண்முகநாதன் மில்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அண்ணா உங்களை தேடுகின்றேன்

அண்ணா எங்களின் மூத்த அண்ணனே. என்ன நடந்தது உங்களிற்கு ஏன் எங்களைவிட்டு வெகுதூரம் சென்றீர்கள் நான் உங்களை அய்யாவின் ஸ்தானத்திலேயே வைத்திருந்தேன். அண்ணா நீங்கள் எல்லாத்திற்கும் இருக்கின்றீர்கள் என்று இருந்தேன். இப்படி நடக்கும் என்று நான் நினைக்கவில்லை சுவிஸில் இருந்து வந்து மீண்டும் சந்திப்பேன் என்று இருந்தேன். உங்களுடன் ஐயா, அம்மா அனைவருடனும் வாழ்ந்த நாட்களை மறக்கமுடியாது அம்மா கூட உங்களின் மேல் அதிக பாசம் அவரே உங்களையும் அழைத்துவிட்டார்.

பிறந்தவர்களிற்கு இறப்பு நிச்சயம் ஆனாலும் உங்களிற்கு இந்த வயதில் வந்திருக்கக்கூடாது. உங்களை நினைத்து மனம் உருகி அழுகின்றேன். உங்களை இனி நான் எங்கு காண்பேன் அண்ணா. உங்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிராத்திக்கின்றேன்.

பாசமிகு தம்பி
ஆனந்த நாதன்(குட்டி)

## அண்ணா எங்கு போனீர்கள்

முதல் முதல் வந்த முத்தென்று சீராட்டி பாராட்டி எப்படி எல்லாம் வளர்த்தார்கள். மூத்த பிள்ளை என்று மதிப்பும் மரியாதையும் கொடுத்தார்கள். என்ன மாதிரி இருக்கவேண்டிய நீங்கள் அதற்குள் எங்களைவிட்டு போனீர்கள். என்ன நடந்தது உங்களிற்கு. வைத்தியசாலைக்கு ஆட்டோவில் போன உங்களுக்கு பிறகு நடந்தது எல்லாம் என்ன?

வைத்தியசாலையில் கிடந்த கோலத்தை பார்த்து நினைத்து நினைத்து அழுகிறேன். அண்ணா ஒன்பது பேரும் ஒன்றாக வாழ்ந்தோம் எப்படி இருந்தோம். இப்போ உங்களை இழந்து அழுகிறோம்.ஒரு மரத்தின் பெரிய கிளை ஒன்று முறிந்துவிட்டது. எங்கள் இதயம் மனம் தனக்குள் அழுகின்றது. உங்களின் நிலைமை அறிந்து அம்மா கூட சொல்லி இருக்கிறா நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும் போது அவனுக்கு ஒன்றும் நடக்கக்கூடாதென்று சொல்லியிருந்தா ஆனால் அம்மா இந்த நிலையில் பார்ந்திருந்தா தாங்கவே மாட்டா. எத்தனை நாள் சாப்பிடாமல் இருந்திருப்பா உங்களின் நினைப்பால் அம்மாவின் பாசம் எல்லாம் ஆண்டவனுக்கு தெரியும். இரத்த பாசம் எங்களை வாட்டிவதைக்கின்றது
அண்ணா எத்தனை நாள் அண்ணா நீ விழுந்திடுவாய் என்று முன்னும் பின்னும் திரிந்து பாதுகாத்திருப்பேன்.

எங்களுடன் எவ்வளவு காலம் வாழ வேண்டிய நீங்கள் ஏன் அண்ணா விட்டு போனீர்கள். காலம் வந்து நீங்கள் போகவில்லை. இதனை என் மனம் ஏற்கவில்லை. என்ன நடந்தாலும் அண்ணை இருக்கிறார் என்று இருந்தோம். அதற்குள் இப்படி எல்லாம் கனவாக நடந்து முடிந்தவிட்டது.

படுக்கையில் கிடந்து எவ்வளவு வேதனை துன்பங்களை அனுபவித்தீர்கள். மனதிற்கு என்ன நினைத்தீர்கள் ஒருகதை கூட எங்களுடன் கதைக்கவில்லை. ஐயா எங்களால் உங்களின் இழப்பை தாங்கமுடியவில்லை. எங்களை எல்லாம் விட்டு போக எப்படி மனம் வந்தது. என்னவென்றாலும் குஞ்சு குஞ்சு என்பீர்களே இனி எந்த பிறப்பில் உங்களை காண்பது அண்ணா. உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றேன்.

பாசமிகு தங்கை
குஞ்சு (சுபத்திரா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே போனீர்கள் அண்ணா

அண்ணா உங்களுக்கு சுகயீனம்' என்று அறிந்து மிகவும் கவலைப்பட்டேன். அடிக்கடிதொலைபேசியில் உங்கள் சுகம் பற்றிக் கேட்பேனே. ஒன்பது பேரும் ஐயா அம்மாவுடன் வாழ்ந்த வாழ்க்கையை மறக்கமுடியவில்லை. ஆண்டவனை வேண்டினேனே உங்களிற்கு சுகமாக வேண்டும் என்று ஆனால் விதி சதி செய்து விட்டது. வைத்தியசாலையில் இருந்த கோலத்தைப் பார்த்து என் மனமே உடைந்து விட்டது. இனி உங்களை எங்கே அண்ணா பார்ப்பது இன்னும் எவ்வளவு காலம் சந்தோசமாக வாழவேண்டிய நீங்கள் ஏன் இப்படி எம்மை விட்டுப்பிரிந்து சென்றீர்கள் என் இதயம் குமுறுகின்றது. அண்ணா அம்மாவை இழந்த கவலையில் இருந்து மீளமுன் உங்களையும் இழந்து விட்டோமே உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

பாசமுள்ள தங்கை

க.சித்திரா (கொலண்ட்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரியின் புலம்பல்

எங்கள் எல்லோருக்கும் மூத்த சகோதரனாய் வந்துதித்த எங்கள் மூத்த அண்ணனே திடீரென எங்கள் எல்லோரையும் விட்டுப் பிரிந்ததேனோ? அம்மாவை இழந்த துயரத்தில் இருந்து மீளமுன் உங்கள் பிரிவு செய்தி கேட்டு மீளாத்துயர் அடைந்தோம். அண்ணா நீங்கள் இன்னும் எவ்வளவு காலம் இவ்வுலகில் வாழவேண்டிய நீங்கள் இந்த வயசில் எல்லோரையும் விட்டுப் பிரிந்ததேனோ?

நானும் மஞ்சுவும் அங்கு நின்ற போது அண்ணா உங்களுக்கு சாப்பாடு ஊட்டிவிட்டோமே வாங்கிச் சாப்பிட்டீர்களே. அது இன்னும் என் கண் முன் நிற்கிறது. முழங்கால் நோவுக்கு எண்ணை போட்டு தேய்த்துவிட்டு. அடுத்த நாள் அந்த நோவெல்லாம் இல்லை சுகமாகிவிட்டது சுசி உன் கைராசியானது என்று சொன்னீர்களே அண்ணா அப்ப எனக்கு எவ்வளவு சந்தோசமாய் இருந்தது. நானும் மஞ்சுவும் பயணம் புறப்படும் போது கூட உன்ர கையால் நாரிக்கு ஒருக்கால் எண்ணை போட்டு தேய்த்து விட்டுப் போ என்று சொன்னீர்கள். அதையும் செய்துவிட்டு தானே வந்தேன். அவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கும் போது மிகவும் மனம் நோகின்றது.

அன்று தான் உங்களைக் காணும் கடைசி நாள் என்று நினைக்கவில்லையே. அம்மாவுக்குப் பிறகு நான் தான் என்று சொன்னீர்களே அது இவ்வளவு சீக்கிரம் நடக்கும் என்று யார் நினைத்தோம். இவ்வுலகில் வாழ விருப்பம் இன்றியோ அம்மாவுடன் சேர்ந்திருக்க சென்றீரோ அண்ணனை. ஐயா,அம்மா,அண்ணை மூவரும் இறைவனின்திருவடியில் இளைப்பாறி எங்கள் எல்லோரையும்வழி நடத்த வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

**சகோதரிகள் சுசி (கொலண்ட்)**
**மஞ்சுளா(லண்டன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம தருமைச் சித்தப்பா

வைத்தியசாலையில் நலமாகி விட்டீர்கள்
என்ற செய்தியை கேட்டு யாவரும்
அளவில்லா ஆனந்தம் கொண்டோம்
நலமாகி வீடு வந்ததும் உங்களுடன்
நிறைய கதைக்க வேண்டும் என்றெல்லாம்
எண்ணி எண்ணியிருந்தோம்
உங்கள் வரவை எதிர்பார்த்து காத்திருந்தவர்களை
ஏமாற்றி விட்டு இறைவன் தன்னுடன்
இரக்கமற்று அழைத்துச் சென்று விட்டான்
சித்தப்பா!!! எம்மைப் பற்றி சிறிதும் எண்ணாது
இவ்வளவு அவசரமாய் நீங்களும் அசன்றதேனோ???
விடை தெரியாமல் விக்கித்து நிக்கிறோம்.....
சித்தப்பா போய்விட்டார் என்ற செய்தி
பொய்யாகி விடக்கூடாது என்று புலம்புகின்றோம்......
சித்தப்பா! நீங்கள் இவ்வுலகில் இல்லை என்பதை
எங்கள் மனம் ஏற்க மறுக்கிறது.
பரந்த இதயம் கொண்ட எங்கள் சித்தப்பா!
உத்தமராய் இவ்வுலகில் வாழ்ந்தீர்கள்
எங்களை உங்கள் பிள்ளைகளாகவே நேசித்தீர்கள்
உங்கள் பெயருக்கு பின்னால் பட்டங்கள் இல்லையே
தவிர
பட்டம் பெற்ற அனைவரையும் உங்கள் பக்கம் ஈர்க்கும்
அற்புத அறிவுத் திறனை கொண்டிருந்தீர்கள்
எப்பேர்ப்பட்ட பிரச்சனைகளையும்
துச்சமாய் எண்ணி எளிதாய் தீர்வு காண்பீர்கள்
பன்னிரண்டு வயதில் பாரவூர்தி ஓடிய துணிவும் -
\- பெருமையும்
எங்கள் சித்தப்பாவை மட்டுமே சாரும்
அதனால் தானோ என்னவோ
எந்தப்பெரிய வாகனத்தையும்
சுலபமாய் கையாளும் திறனை
தானாகவே வளர்த்துக் கொண்டார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் சித்தப்பாவிற்கும் வாகனத்திற்கும்
இடையிலான உறவு நீண்டது.
பகரேனில் அமெரிக்க வாகனங்கள் ஓடிய
பலதரப்பட்ட அனுபவங்களையும் - மற்றும்
வெளிநாட்டு வேலை அனுபவங்களையும்
இன்றும் பசுமை மாறாமல் நினைவில் வைத்து
நகைச்சுவை கலந்து எங்களுடன்
ஆனந்தமாய் பகிர்ந்து கொள்வீர்களே
எந்தப் பகட்டுமின்றி எல்லோருடனும்
சிநேகிதமாய் எளிமையுடன் பழகுவீர்களே
உங்கள் கபடமற்ற குணத்தால் எல்லோர் மனதிலும்
நீங்கா இடம் பெற்றுவிட்டீர்கள்.

சித்தப்பா! எங்களை விட்டு நீங்கள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம்மோடு என்றென்றும்
கலந்திருக்கும்
நீங்கா நினைவுகளுடன் உங்கள் ஆன்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

- துளசி, மகி, துளஷா, சுதன், முகுந்தன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரன்பு மிக்க பெரியமாமா!

**எங்கள் குலத்தில் வந்துதித்த முதல் முத்து நீங்கள் தான் பெரியமாமா**
பெரியமாமா, பெரியமாமா என்றழைக்க இன்று நீங்கள் இல்லையே பெரியமாமா. நீங்கள் எங்களை எல்லாம் விட்டுச் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டுச் செல்லாது நாங்கள் அம்மம்மாவை இழந்த சோகத்தில் இருந்து மீளமுன் உங்கள் இழப்பை எப்படி தாங்கிக் கொள்வது. நான் இறுதியாக அம்மம்மாவின் இறுதிச் சடங்கின் பின் உங்களிடம் கூறினேனே உங்கள் உடம்பைக் கவனியுங்கள் என்று. ஏன் பெரியமாமா எங்களை ஏமாற்றி விட்டீர்கள். நான் வந்து திரும்பும்போது உங்கள் சந்தோசம் , கவலைகளை எல்லாம் கொட்டித் தீர்த்தீர்களே. இதுதான் என்னுடன் கதைக்கும் கடைசி வார்த்தை என்று அன்று எனக்கு தெரியவில்லையே?

உங்கள் அன்பான வார்த்தைகள், பகிடிகள், இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டு தான் இருக்கிறது அது மட்டுமல்லாது எல்லோருக்கும் உதவி செய்வதிலும் நீங்கள் வல்லவராகத்தான் திகழ்ந்தீர்கள். உங்கள் செயல்களை வார்த்தையால் சொல்ல முடியாது. நீங்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது ஒவ்வொருநாளும் தொலைபேசி எடுத்து நீங்கள் குணமாகி விட்டீர்களோ? என்று கேட்பேனே . குணமாகி விடுவீர்கள் என்று தானே நம்பியிருந்தோம். ஆனால் தொலைபேசியில் உங்கள் துயரச் செய்தி தான் வந்தது. மனமுடைந்து விட்டேன் பெரியமாமா உங்கள் பிரிவால் நான் மட்டுமல்ல என் கணவர் பிள்ளைகளும் கவலைப்படுகின்றனர். உங்கள் அன்புக்கும் உங்கள் குணத்திற்கும் இணையானவர்கள் இவ்வுலகில் யாரும் இல்லை. நீங்கள் மட்டும் தான் எங்கள் பெரியமாமா, அது மட்டுமல்ல உங்கள் அன்புப் பேரனையும் எல்லோ கூட்டிப் போய்விட்டீர்கள்? உங்கள் அன்பு புனிதமானது, பாசம் உண்மையானது என நிரூபித்து விட்டீர்கள். உங்கள் இருவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**மருமகள்**
**கவிதா**
**கொலண்ட்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனி புலம்பல்

அத்தான் அத்தான் என்று யாரை இனி நாம் அழைப்போம்!
மெய்யான உங்கள் அன்பை மேதியினில் எங்கு காண்போம்!
அன்பான வார்த்தைகள் பல கதைகள் சொன்ன – அத்தான்
மெய்யான எம்மைவிட்டு வேறுலகு சென்றீரோ?

யமன் வந்து உங்களைத் தன்னோடு அழைத்தானோ?
இறைவன் தனக்கு தேவையென்று சீக்கிரமாய் அழைத்தானோ?
எவன் வந்து அழைத்தாலும் ஏன் அத்தான் சென்றீர்கள்?
எமை இங்கு தவிர்க்கவிட்டு எங்கே அத்தான் போனீர்கள்?

**மைத்துனி**
**மாலினி**

# என் பெரியண்ணா

அண்ணா எங்கள் உள்ளக்கடலில் என்றும் உங்கள் நினைவுகள்
அலையாய் அடித்துக்கொண்டிருக்கின்றன.
அங்களை ஏன் மறந்து சென்றீர்கள்?
உங்கள் உடல் தளர்ந்தாலும்
எப்பொழுதும் சுறுசுறுப்புடன் இருப்பீர்கள்

இப்போது அமைதியாய் தூங்குவதேன்?
ஒரு மெழுகுவர்த்தி தன்னை அர்பணித்து ஒளி தருவதுபோல
எங்களுக்கு உங்களையே அர்ப்பணித்தீர்கள்
அண்ணா உங்களது உடல்தான் பிரிந்திருக்கின்றது
ஆனால் உங்களுடைய நினைவுகள் எங்களை விட்டுப்பிரியாது.

**என்றும் உங்கள் நினைவுடன்**
**தம்பி ரவி KTM எண்ணெய் மில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரங்கல் உரை

எங்கள் மீது என்றும் அழியாத அன்பு கொண்ட ஆனந்தராசாவே. உனது ஆனந்தமான கதைகள், பேச்சுக்கள் எனி எப்போது கேட்கப்போகின்றோம். உனது பகிடியான கதைகள் எல்லாம் எங்கள் செவிகளில் ஒலித்துக் கொண்டு இருக்கின்றன.எதிர் பாராத விதமாக நீ ஓடி மறைந்து விட்டாய். உனது மறைவானது மரத்தால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதையாகிவிட்டது. அதாவது அக்கா பாக்கியம் மறைந்த கவலை என்றும் மாறியபாடில்லை. அதற்கிடையில் நீயும் மறைந்துவிட்டாய். இது போதாதென்று உனது பேரன் லதுமிலனையும் கூட்டிச் சென்று விட்டாய். இவை எல்லாவற்றையையும் நாங்கள் எப்படி மறக்கமுடியும், ஆறாக் கவலையாகவே எப்பொழுதும் இருக்கும்.

ஒரு சம்பவம் எங்களுக்கு மறக்க முடியாமல் இருக்கின்றது. அதாவது நானும் மாமி வடிவாம்பிகையும்,உங்களிடம் வந்த போது நீ உடனடியாக ஓடிப்போய் அப்பம் வாங்கி வந்து தந்தாய். மறு தரம் திரும்பிப்போயும் மேலும் அப்பம் வாங்கித் தந்தாய். இதனை நாங்கள் ஒரு போதும் மறக்கமாட்டோம். நினைக்க நினைக்க கவலையாகவே இருக்கின்றது. பெரியாம்பி,பெரியாம்பி என்று தானே நாங்கள் எல்லோரும் உன்னைக் கூப்பிட்டுவோம் எனி யாரை நாம் அவ்வுருவில் காண்போம்.

விதியின் விளையாட்டை யாம் அறிவோம். இதை யாராலும் மாற்றமுடியாது என்று மனத்தை தேற்றிக்கொள்ளுகின்றேன். உன் ஆத்மா இறைவன் பாதம் செல்ல இறைவனை வேண்டுகிறேன்.

**கு. கந்தசாமி குடும்பம்**
**ஆறாலி வடக்கு**
**வட்டுக் கோட்டை**
**கந்தசாமி மாமா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியமுடன் காப்பவனே!

பெற்றெடுத்த பிள்ளைகள் போலெம்மை
பிரியமுடன் காக்கின்ற பெருந்தகையே
திக்குகள் யாவிலும் தேடுகின்றோம்!
தூயவளே உம்மைக் காணவில்லை
நித்தமுமே உம்மினிய மொழிகேட்டு
நிறைவோடு வாழ்ந்தோமே இங்கே
உத்தமர்களே உன்னுடலம் சரிந்ததுவோ
உயிர்முதலே உம்மை இனியென்று காண்போம்!

சுதன்,சந்திரா
மருமகன் துவாரகன்

# ஓடியே வந்திடுவீர்!

வாடியே துடிக்கின்றோம்
வான்மழை போல் கண்ணீரை சொரிகின்றோம்
ஓடியே வந்திடுவீர் துயர்போக்க
ஒளிமுதலே ஏன்மறைந்தீர் எமைவிடுத்தே
நாடியே வருவோர்க்கு நல்லுதவி
நாளுமே புரிகின்ற நல்லவரே
கூடியே துயருற்றோம் நின்பிரிவால்
இரு உயிர் உம்மையினிக் காண்பதெப்போ!

தங்கை ரவீந்திரன் சுகுணா
மருமகன் லக்ஷீன்,பிரதீப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புசார் மைத்துனர் ஆனந்தராசா

சிறுவயதிலிருந்து எனக்கு அறிமுகமாகி பின்பு மைத்துனர் ஆகினீர் எனது மகளை கொழும்பு வைத்தியசாலையில் அனுமதித்த போது நீங்கள் உதவி செய்ததை மறக்க முடியுமா. இந்தியாவில் இருக்கும் போது பண உதவி செய்ததையும் அத்துடன் மகனை இழந்து வந்த வேளை எமக்கு வான் கொண்டு வந்து யாழ்நகர் கூட்டி வந்ததையும் மறக்க முடியாது. நீங்கள் எனக்கு செய்த உதவிகள் பல. இருப்பிலும் எனக்கு என். தொழிலான வைத்தியத் தொழிலை வழிகாட்டி போயுள்ளீர்கள். இறுதி நேரத்திலும் கூட எல்லோருக்கும் உதவி செய்து விட்டுத்தான் போயுள்ளீர்கள். இவற்றை எல்லாம் நினைக்கும் போது நெஞ்சம் கனக்கிறது. எமக்கு ஓர் மூத்தவராக மேலும் அறிவும் ஆலோசனைகளும், உதவியும் செய்வீர்கள் என எண்ணியிருந்த வேளை இப்படி நோய்வாய்பட்டதேனோ. உங்கள் ஆத்மாசாந்திபெற நல்லூர் முருகன் திருவடியில் பிரார்த்திப்போமாக.

மைத்துனர்

வைத்தியநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் செல்வன் தயாபரன் லதுமிலன் அவர்களின் வரலாற்றுச் சுவடுகள்



வன்னிமா மண்ணதன் மைந்தன்
வளர் தரு திருவால் பொலிந்திடும் கனக
கார்த்திகேசுவும் அவர் மனைவி
நல்லரும் தெய்வக்கற்பினாள்
நாகம்மாவும் செய்த புண்ணியத்தால்
ஜெகத்தினில் உதிர்த்த தயாபரன் தன்னை
பல் வளம் பல்கும் பதியாம் நல்லூர்
பாங்கினில் உயர் குடி வாழும்
செல்வமும், சிறப்பும், செழிந்திடும் ஊராம்
கல்வியங்காடெனும் தொல்விடம் அதனில்
அன்பும், அறமும் ஓங்கிட வாழ்ந்த
ஆனந்தராசா, இந்திரா தேவி
ஆகியோர் செய்த தவப் பயனாய்
வந்துதித்த மீரா தன்னை அக்கினி
சாட்சியாய் திருமணம் செய்து இனியதோர்
புதல்வர் கீர்த்திகா, லதுமிலன், டிசான் என்போர்
முக்கனிகள் போல் தித்தித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுக்கிடையில் அருந்தவசீலன்

லதுமிலன் ( 2000 - 02 - 12 ) வந்து உதித்தான்

புன்னகையரசனாய் தவழ்ந்த எம்மவன் பிறந்து

ஆறு மாதம் வரை சீராளன் சீராகத்தான் திகழ்ந்தான்.

அதன் பின் லதுமிலன் கதிர்காமக் கந்தனை தரிசித்து ஆனந்தத்துடன் பதி திரும்பிய குழந்தைக்கு தெரியாது தன்னை இப்படி ஒரு கொடிய காய்ச்சல் என்று. வைத்தியத்திற்காக கடல் கடந்து கூடச் சென்றும் எந்தப்பயனும் கிடைக்கவில்லை. மூவைந்து வருடம் தனில் இயல்புகள் குன்றி இருந்த போதும் புன்னகை பூத்து எமையெல்லாம் பொங்கிடச் செய்துமே வாழ்ந்த லதுமிலன் புன்னகையாலே பொருளெல்லாம் உணர்த்தும் பொலிவினை உம்மிடம் கண்டோம்.

எம்மருஞ் செல்வம் என நீ இருந்தாய் எம்மையெல்லாம் துயரக்கடலில் ஆழ்த்தி எங்கு நீ சென்றாய் எரிகிறது இதயம் விதிப்பயன் இதுவோ ?

அமரர் லதுமிலன் அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிராத்திக்கின்றோம்.......




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் தவிப்பு

**தொலை தூரத்தில் இருந்து.........**

கள்ளம் கபடமற்ற உன் புன் சிரிப்பும். புன்னகையில் மலர்ந்த உன் முகத்தையும் பார்க்கவேணும் போல இருக்கிறது. எங்கே காண்பது உன் சிரிப்பை. ஒவ்வொரு கிழமையும் உன்னை வீடியோவில் பார்க்காவிட்டால் எனக்கு நிம்மதி இருக்காது. நீ பிறந்ததில் இருந்து ஒரிரு வருடம் தானடா உன் கூட இருந்தேன். உன் கூட இருந்து உன் பணிவிடைகள் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை. ஏன் இந்த சோதனையோ ?

தொலைவில் தனியாக நான் இருந்து தவிக்கின்றேன் நான் இங்கு உன் துயரச் செய்தி கேட்டு உடன் வந்து உன் முகம் பார்க்க முடியாத பாவி நானடா. அப்பா என்று ஒருதரம் கூப்பிட மாட்டாயா என்று ஏங்கிய நாட்களோ பல உன் வருத்தத்தை குணப்படுத்தி விடலாம் என்று என்னால் முடிந்தவரை போராடினேன். எதுவும் நடக்கவில்லை தெய்வங்கள் கூட என்னைக் கை விட்டு விட்டது. உன் இழப்பால் எல்லாம் வெறுமையானது போல உணர்கிறேன்.

சக்கர நாட்காலியில் நீ இருக்கும் போது பொம்மைக்குட்டி போல இருப்பாயே லதுக்குட்டி. நீ உடல் நலம் குன்றியிருந்தாலும் நீ எங்கள் வீட்டு செல்லக்குட்டியடா. ஐயோ தாங்க முடியவில்லை குட்டி.சீக்கிரமே மறுபிறப்பெடுத்து அதிலும் ஆரோக்கியமாய் வந்திடடா லதுக்குட்டி இறுதி நிமிடத்தில் வைத்தியசாலையில் உன்னை நான் வீடியோவில் பார்க்கும் போது உன் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. அதன் அர்த்தம் என்னவென்று அப்பாவிற்கு புரியவில்லையடா. என்ன சொல்ல நினைத் தாயோ,உன் விருப்பம் என்னவோ உன் ஆசைதான் என்னவோ அதை நினைக்கும் போது என் நெஞ்சே வெடித்துவிடும் போல இருக்கின்றது. லதுக்குட்டி "விதி செய்த கோலம் அவ்வழியே நாமும் செல்ல வேண்டியது தான் போல.

லதுக்குட்டி நீ நல்லாய் இருக்கவேணும். உன் ஆத்மா சாந்தி அடைந்து மறு பிறப்பு எடுக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

**அன்பு அப்பா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயின் மனவேதனை

**தவமாய் பெற்றெடுத்த என் அன்புச் செல்வம்**
**லதுக்குட்டியே.........**

நீ பிறந்த நொடிப் பொழுதினில் உன் அழுகைச்சத்தம் கேட்டு என் இருகைகளால் அள்ளி அணைத்து உன் உச்சிதனை முகர்ந்து என் வம்சம் தளைக்கவென வந்த எம் குலவிளக்கு நீ என்று எண்ணி சந்தோசத்தில் கர்வம் கொண்டேனடா லதுக்குட்டி. அதற்கு எனக்குக் கிடைத்த தண்டனை இதுவா?

நீ பிறந்து ஆறுமாதம் வரை சராசரிக் குழந்தையைப் போலதானே இருந்தாய் அப்போ யான் பெற்ற இன்பமோ கோடியடா நான் பெற்ற சந்தோசத்தைப் பார்த்து பிரமனின் கண்பட்டு விட்டது போலும். தெய்வ விக்கிரகம் மாதிரி இருந்த உனக்கு இப்படி ஒரு கொடிய காய்ச்சலை கொடுத்திருப்பாரோ? ஏன் இந்த சோதனை ஐயா தாங்கமுடியவில்லை. எங்கையடா போய் விட்டாய். உன்னை ஒரு தெய்வக் குழந்தையாய் நினைத்துத்தானே பதினைந்து வருடமாய் உன் பணி விடைகளை திருப்தியுடனும்,சந்தோசத்துடனும் செய்து என் கவலையெல்லாம் மறப்பேன்.ஏனையா அம்மாவை கஸ்ரப்படுத்த கூடாது என்று நினைத்து அப்பாவுடன் சென்றுவிட்டாயோ?
என் வயிற்றில் பிறக்காமல் வேறு யார் வயிற்றில்லாவது பிறந்திருந்தாலவது நீ ஆரோக்கியமாக இருந்திருப்பாயோ தெரியவில்லை விதியின் விளையாட்டு என்னையும் உன்னையும் பிரித்துவிட்டது. என்னுயிர் பிரியும் வரை உன் ஞாபகங்கள் என் கூடத்தான் இருக்கும் அழகின் ஓவியமாய். அன்பின் வடிவமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகையின் சிகரமாய் என் மடியில் தவழ்ந்த குழந்தையாய் நினைத்ததனா லேயோ நீ எங்கு ஐயா போய் விட்டாய் தெய்வக்குழந்தையாய் நினைத்ததாலேயோ இவ்வளவு கெதியாய் தெய்வத்திடம் போய் விட்டாயா? உன் சிரிப்பைக் காணமல் தவிக்கின்றேன் நான் இங்கு.இவ்வளவு காலம் என் மடியில் தவழ்ந்த நீ இவ்வுலக வாழ்வு போதும் என்று நினைத்து விட்டாயோ? லதுக்குட்டி என்றழைத்தால் சிரித்தமுகத்தடன் திரும்பிப் பார்ப்பியே உன் ஆனந்த சிரிப்பை எனி நாம் எப்போது காண்பது நீர் இல்லாமல் வீடு வெளிச்சுப் போய் கிடக்குதையா. ஏன் ஐயா அம்மாவை தனியாய் தவிக்கவிட்டுச் சென்றீர். தூங்கமுடியவில்லை லதுக்குட்டி
எங்கு திரும்பினாலும் உன் நினைவுகள் வாட்டுகிறது கொழும்பில் இருந்து வரும் போது எவ்வளவு சந்தோசமாய் அம்மப்பாவை பார்க்க வந்தாயே கடைசியில் அம்மப்பாவும் போய்விட்டார் நீயும் அவருடன் போய்விட்டியே.
இத்தனை வருடமாய் புன்னகையிலேயே எனக்கு உன் மொழி கற்பித்து உன்னுடனே வாழ்ந்த எனக்கு உன் இழப்பு பேரிடியாக இருக்குதடா லதுக்குட்டி. என் வேதனையை யாரறிவாரோ?
அம்மா ஏதும் உனக்கு குறைவிட்டிருந்தால் என்னை மன்னித்து விடு லதுக்குட்டி. நீ மறபிறப்பு எடுத்து அம்மாவிடம் வந்திடடா. அதிலும் நீ எந்தக்குறையும் இல்லாது ஆரோக்கியமாய் இருக்க வேண்டும். உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

**உன் பிரிவால் துயருறும்**
**அன்பு அம்மா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்காவின் ஏக்கம்

**என் அன்புச் செல்லக் குட்டி லது......**

நீ எனக்கு தம்பி மட்டுமல்ல, நீ என்னுடைய நல்ல நண்பன்,என் சிரிப்பு, என் சந்தோசம், என் வாழ்க்கை எல்லாமே...
என் கவலை எல்லாம் உன் சிரிப்பைப் பார்த்ததும் எல்லாமே மறந்து போய்விடும்.
எங்களின் வீடு சந்தோசத்திலேயே நிறைந்திருந்தது உன்னாலே மட்டும் தான் லதுக்குட்டி. ஆனால் அதை நாம் எப்ப திரும்பப் பார்ப்பது. தினமும் நான் பாடசாலை விட்டு வரும் போது புத்தகப் பையைக் கூடக்கழட்டாமல் உன்னை முத்தமிட்டுத்தானே போவேன். இனி யாருக்கு நான் முத்தம் கொடுப்பது ஏனடா என்னை விட்டுப் போனாய். எனியாருடன் நான் விளையாடுவது. ஏன் என்னை இப்படி ஏமாற்றிவிட்டாய். இந்த உலகத்தில் நான் உன்னைத்தானே ரொம்ப நேசித்தேன். எனி மேல் என் பிறந்த நாளில் உன் ஞாபகங்களை நினைத்து கண்ணீர் சிந்துவேன். உன் படங்களைப்பார்க்கும் போது என்னுடைய தேவதை என்னைவிட்டு போனது போல் உணர்கிறேன். கொழும்பில் இருந்து வரும் போது நீ எவ்வளவு சந்தோசமாய் வந்தாய். நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை. நீ இவ்வளவு சீக்கிரம் எங்களை எல்லாம் விட்டு போவாய் என்று அடுத்த பிறப்பிலும் நீயே எனக்கு தம்பியாய் வர இறைவனை வேண்டுகிறேன் லதுக்குட்டி எனக்கு நல்லாய் தெரியும் நீ எங்கும் செல்லவில்லை எங்களுடன் தான் இருப்பாய் என்று. லதுக்குட்டி உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை மன்றாடுகின்றேன். லது லது லதுக்குட்டி ஓடிவாடா!!

அக்கா கீத்தா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பியின் ஆதங்கம்

என் அன்பு லது அண்ணா!

லது அண்ணா லது அண்ணா !

எங்கே போய் விட்டீர்கள்.

என் இதயம் உங்கள் சிரித்த முகத்தைக் காணாது துடிக்கிறது.உங்களுடன்விளையாடினது,உங்களை கட்டி அணைத்தது முத்தம் கொடுத்தது. உங்களுக்கு நான் செய்த குறும்புகளோ பல. இதையெல்லாம் நினைக்கும் போது என் நெஞ்சம் கணக்கிறது. எனக்கு நீங்கள் அண்ணா என்றாலும் எனக்கு நீங்கள் சின்னத்தம்பி மாதிரித்தானே இருந்தீர்கள்

அம்மாவுக்குத் தெரியாமல் உங்களுக்கு நான் யோகக்ற், ஐஸ்கிறீம், சொக்லட் எல்லாம் ஊட்டி அம்மாவிடம் அடி வாங்கியது எல்லாம் மறக்க முடியாத நினைவுகள் தான். என்னால் நம்ப முடியவில்லை நீங்கள் இவ்வளவு சீக்கிரம் எங்களை விட்டு போய் விடுவீர்கள் என்று. கொழும்புக்கு போகவே எனக்கு விருப்பமில்லாமல் இருக்கிறது அண்ணா நீங்கள் இல்லாத வீட்டில் எப்படி இருக்கப் போகிறோமோ தெரியவில்லை. இதற்கு மேல் என்னால் எழுத முடியவில்லை இப்படி உங்களுக்கு எழுதுவேன் என்று எதிர்பார்க்கவில்லை. லது அண்ணா உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறேன்.

சாந்தி!

தம்பி டிசான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரியப்பாவின் மனக்குமுறல்

இவ்வுலகில் மானிடராய் பிறப்பது அரிது. அதிலும் அப்பிறப்பை திறம்பட சிறப்பித்தல் அரிது. இவையெல்லாம் எம் கையில் இல்லை. எம் விதியை இறைவனே தீர்மானிக்கின்றான். என்று எண்ணினாலும் மனம் ஏற்க மறுக்கிறது. எங்கள் குடும்பத்தில் யாவரும் உன்னை நினைத்து கவலைப்படாத நாளில்லை என் தம்பியும் உன்னை நினைத்து மனம் வருந்திக் கதைப்பதுண்டு. உன் சிரிப்புத் தான் என் கண் முன் நிற்கிறது. ஏன் இந்த சோதனையோ.நாங்கள் அப்புச்சியை இழந்த சோகத்தில் இருந்து மீளமுன் உம் பிரிவை எப்படித்தான் தாங்கிக்கொள்வது.தம்பி தயாபரன் வெளிநாட்டில் தனியாய் இருந்து எப்படித்தான் தாங்கிக் கொள்ளப்போகிறானோ. எங்கள் குடும்பத்தின் செல்ல மகனாய் தவழ்ந்த லதுக்குட்டி இப்ப எம் கூட இல்லை என்று நினைக்க வேதனையாய் உள்ளதடா. உன் ஆத்மா சாந்தி அடைந்து மறுபடியும் எம் குடும்பத்தில் வந்து பிறக்க இறைவனை வேண்டுகிறேன்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

செல்வநாயகம் பெரியப்பா
பெரியம்மா
அண்ணன்மார்
அக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தப்பாவின் புலம்பல்

லதுக்குட்டி லதுக்குட்டி!
எங்கு நீர் சென்றுவிட்டீர்
புன்னகையை மட்டுமே உமது அடையாளமாய்
விட்டுச் சென்றீரே.
லதுக்குட்டி என்றவுடன் எவ்வளவு ஆனந்தமாய் சிரித்துடுவீரே.
பதினைந்து வயசிலையும் நீர் மழலைச் சிரிப்புத்தானே சிரித்தீர்.
இந்த புன் சிரிப்பை எனி நாங்கள் எப்பத்தான்
பார்க்கப்போகிறோமோ? தொலைவினிலே நாங்கள் இருந்தாலும்
எப்பவும் உம் நினைவுகள் தான் லதுக்குட்டி கொழும்பில்
இருந்த காலத்தில் நாம் எல்லோரும் கதிர்காமம்
போயிருந்தோம். அப்போ மலை ஏறும் போது உம்மை நான்
என் தோள் மீது சுமந்து மலை ஏறிய போது நீர் எவ்வளவு
குதுகலமாய் வந்தீரே. அவற்றை எல்லாம் நினைக்கும் போது
என் நெஞ்சம் கணக்கிறது.

நாங்கள் சித்தப்பாவின் துயரச் செய்தி கேட்டு அதிர்ச்சியில்
அழுது முடிக்க முன் உம்முடைய செய்தியும் வந்துவிட்டது
தாங்க முடியவில்லை லதுக்குட்டி.

சித்தப்பா, சித்தப்பா என்று எனி நாங்கள் யாரைக் கூப்பிடுவது.
ஏன் இவ்வளவு சீக்கிரமே ஓய்வெடுத்துவிட்டீர்கள். லதுவின்
மேல் நீங்கள் வைத்த பிரியத்தை யாம் அறிவோம். அதுவே
அவனையும் கூட்டிச் சென்று விட்டீர்களோ? இறப்பும் பிறப்பும்
நியதிதான், ஆனாலும் உங்கள் இருவரின் இழப்பும் யாராலும்
ஈடுசெய்ய முடியாது லதுக்குட்டி, சித்தப்பா உங்கள் இருவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

*சந்திரன் சித்தப்பா*
*நந்தி சித்தி*
*அவுஸ்ரேலியா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மாவின் அன்பான குட்டப்பா

என தருமைச் செல்வம் லது. உங்களை அப்பப்பா குட்டப்பா என்று செல்லமாக கூப்பிடுவார். அப்பப்பா நோய் வாய்ப்பட்டு இருக்கும் போதும் உங்களையே கூப்பிட்டபடி இருந்தபடியால் கொழும்பிலிருந்து உங்களை வரவழைத்தோம். ஆனால் அப்பப்பா கூட்டிச் செல்வார் என்று நாம் கனவிலும் நினைக்கவில்லை நினைக்கவே மனம் நோகிறது. எழுதுவதற்கு முடியாமல் இருக்கிறது லது. எனது மடியில் நீங்கள் தவழ்ந்த காலங்களை மறக்க முடியுமா? மூன்று முறை இந்தியா (கேரளாவிற்கு) நானும் அப்பப்பாவும் கொண்டு சென்று வைத்தியம் பார்த்தோம். அது கூட பலனளிக்காது போய்விட்டதே. கேரளாவில் குருவாயூர் கோவில் கடாம் பிறை அம்மன் கோவில் எல்லாம் உங்களை கொண்டு சென்று நேர்த்தி எல்லாம் வைத்தோம் இப்படி எத்தனை கோவிலுக்கு உங்கள் பெயரில் அர்ச்சனை செய்திருப்போம். ஒரு கடவுளும் உங்களைக் காப்பாற்றவில்லையே. என்ன செய்வது நாம் கொடுத்து வைத்தது இவ்வளவு தானோ? லதுக்குட்டி நீங்கள் திரும்ப எமது குடும்பத்தில் வந்து பிறக்க வேண்டும் என்று இறைவனைப் பிராத்திக்கின்றேன்.

லது ஆறுமாதத்தில் கைநீட்ட கன்னத்தில் குழிவிழ சிரித்துக்கொண்டு பார்த்து என்னிடம் வந்ததை இப்போ நினைத்தாலும் இரத்தம் கொதிக்கிறது. பின்பு நாம் எப்போது கதை கேட்போம் என்றுபார்ப்பீர்கள் கதை கேட்டதும் சிரிக்கும் சிரிப்பு எங்களால் மறக்கமுடியுமா?
அந்தச் சிரிப்பை எனி எங்கு எப்போது பார்க்கப்போகிறோமோ? கனவில் என்றாலும் அடிக்கடி வந்து உங்கள் சிரிப்பை காண்பியுங்கள். அப்பப்பாவை இழந்து அழுது தீர்க்கு முன் உங்கள் பிரிவு எம்மை ஆற்றமுடியாது. கண்ணீர் மல்கி நிற்கின்றோம். இனி இருவருக்குமாக அழுது கண்ணீர் காணிக்கையாக்கி இருவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து இருப்பதே எனது வாழ்க்கை.
சாந்தி ! சாந்தி ! சாந்தி!!!

**அம்மம்மா இந்திரா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பான லதுக்குட்டி

சின்ன மருமனே என் சிங்காரத் தேவதையே
சிறுகையை ஆட்டிச் சிரிக்க வைப்பாய் இதயமதை
உள்ளத்தை உணர்த்திட முடியாது. உவகையுடன் - நீ
உளமாறக் காட்டும் பாச உள்ளத்தை உறையவைப்பாய்

அழகு நிறைந்த அன்புத் தேவதை அருகில் இருப்பது போல்
அணி சேர்க்கும் வெள்ளை நிற வேட்கை கொள்ள வைக்கும்
எம தன்பை புரிந்து முகம் மலர்ந்து நீ மகிழ்வதை
எண்ணி எண்ணித் தவிக்கினடறேன் என் லதுக்குட்டியே.

பக்கத்தில் நானிருந்தால் பாங்குடனே பல உதவி
பங்கேற்றுச் செய்து பாசத்தைப் பகிர்ந்திருப்பேன்.
தூரதேசம் கடந்து பார்க்கக்கூட முடியாத பாவியாய்
பரிதவித்து நிற்கும் பாசமருமகனே புரிகிறதா உந்தனுக்கு

சீரிய அன்புதனைச் சிரிப்பாலே எமக்குணர்த்தி
சிந்தை நிறைந்து சினத்தைப் போக்கிடுவாய்
குடும்பத்தின் குல விளக்கே குன்றாத ஆரமுதே – உன்னுடன்
குவலயத்தில் வாழ குடுத்து வைக்காத உறவுகள் நாம்

கள்ளம் கபடமறியாத கருணையுள்ளமே
கலங்கமற்ற உன் பாசம் காலனையும் கவர்ந்ததுவோ
பாசத்தின் ஊற்றே பக்குவமாய் இறைவனடி சேர
பாங்குடன் இருப்பாய் பற்றற்ற செம்மலே........

**அகிலன் மாமா குடும்பம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு மருமகனே

குழந்தைப்பருவத்தில் இருந்து இறுதிவரை உன் அசைவுகளைப் பாத்து வந்த எனக்கு இப்படி ஒரு வேதனையைத் தந்து விட்டாயே லதுக்குட்டி, என்றும் உன் சிரிப்பும் பிரகாசமான அந்த முகமும் மறக்க முடியாது உம் இழப்பால் நாம் இருவரும் ஆனந்தத் துயரம் அடைகின்றோம். லதுக்குட்டி என்றழைத்தால் உன் சந்திர வதனம் மலர்வதைப் பார்த்துக் கொண்டே இருக்கலாம். புகைப்படம் எடுக்கும் போது நீ கொடுக்கும் காட்சி கண்ணுக்குள்ளேயே நிற்கிறது கொழும்பில் இருந்து காத்து அம்மப்பாவை பார்க்க வந்த நீ அம்மப்பாவுடன் சென்று விட்டாயே? மீண்டு:ம் எங்கள் குடும்பத்திலேயே பறந்துவர நல்லூர்க் கந்தன் துணைபுரிவார்.

கஜன் மாமா
லக்ஷ்மி அத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நெஞ்சில் நீங்கா இடம் பெற்றவன்

"தோற்றமும் மறைவும் நியதி" இது மறுக்க முடியாத உண்மை என்றாலும் இவ்வளவு அவசரமாக ஏன் இந்த மறைவு. உனது மறைவுச் செய்தியினை கேட்டு உடைந்த என் உள்ளம் இன்னும் கண்ணிரால் கதை வடிக்கிறது.

என்னை விட்டு நிரந்தரமாகவே பிரியப் போவதால் தான் முன் கூட்டியே என்னை இங்கு தவிக்க விட்டுச் சென்றாயோ?

நீ என்னோடு இருந்த காலத்தை என்னால் மறக்கவே முடியாது துடிக்கின்றேன். எனது மனதில் குடி கொண்டிருக்கும் வேதனைகளை தணிப்பதற்காக மாடி படிகள் இறங்கி வந்து உனது சிரித்த முகத்தை கண்டு ஆறுதலடைந்த நாட்கள் எத்தனையோ! அதை நீ அறிவாயோ? இவைகள் எல்லாவற்றையும் இழந்துவிட்டேன். ஏன் நான் உன்னில் இவ்வளவு பாசம் வைத்திருக்கிறேன் என்று எனக்கே புரியவில்லையடா?
பூர்வ ஜென்ம பந்த மென்றுதான் நினைக்கின்றேன் நீ மீண்டும் வர மாட்டாயென நான் அறிவேன். ஆயினும் என் நெஞ்சை விட்டு ஒரு போதும் நீ நீங்கமாட்டாயடா.
எத்தனை ஜென்மமெடுத்தாலும் நான் உன் மீது வைத்திருக்கும் அளவு கடந்த பாசம் தொடர்ந்து வரும். உனது நினைவுகள் என் நெஞ்சத்தை விட்டு ஒரு போதும் அகலாது என்றும் உன்னை நினைத்து வாழ்வேன் எனது உயிர் லது........
உனக்கு ஆன்ம ஈடேற்றம் கிடைக்க நான் வழிபடும் காளி அன்னையை என்றும் பிரார்த்திப்பேன்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

என்றும் உனது அங்கிள்
சுபாஷ் சந்திரன்
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லதுக்குட்டி

வாழ்வில் அன்பாய் உறவாய்
அன்போடு .. வாழ்ந்திரே லதுக்குட்டி
லதுக்குட்டி என்று அழைக்க
இங்கு நீ இல்லையே
சிரித்து மகிழ்ந்திட..நீர்
இன்று இல்லையே
லதுக்குட்டி லதுக்குட்டி
உம்மை நினைக்கையில்
எங்கள் நெஞ்சம் கலங்குகிறது
மழலைச்சிரிப்பும் மனங்கள் நிறைந்த
மகனாய் பாசம் பொழிந்து காலமும்
கனவாய் போனது ஏனோ?
கண் முன்னில் நீரில்லை வெறுமையில்
துடிக்கிறோம்.
எங்கே எங்கே உன் விழித்தன்னைப்
பார்க்கத் தவியாய்
தவிக்கின்றோம் லதுக்குட்டி

தாத்தா,அம்மம்மா, பவுஜன் அண்ணா,
கௌசிகா அக்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு

12.2.2000

இறப்பு

13.07.2015

## தயாபரன் லதுமிதன்

ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்

அன்பு அண்ணன்(பவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A hero in the modern world are those who can read and write those who are smart and can fight. But then came a boy without any of this abilities but bought light into darkness, he bought smile into saddest face.His heart as clear as diamond and pure as gold. Lathu our little brother, you are eccentric because the way you smile, you are attractive because the way you smile and you are exceptional because the way you smile. Your smile says infinity amount of things. Our time with you well spent even though little we met you the first day we came to your house, your family welcomed us with words but you with your smile that touched our hearts. You left this world but not our hearts. You and your memories can't be taken out from us, you are still with us.

- Manusha:- When I met you I just wanted you to smile once but you kept on laughing. I have never felt soo beautiful when people said it by words, but your smile did.
- Hamza:- The way you looked at my glasses and smiled, the way you laughed and the way you cheered my soul.
- Shaheed:- I had never met you face to face but anyways I can picturize you. I'm worried that I fail to meet you.

Love you a lot Lathu!!! We miss you alot. May your soul rest in peace brother.

Manusha, Hamza, Shaheed, Afzal,

Vishnukanth, Niluxshi, Sri Haran, Dinesh and Shameem.

{ Friends of Keerthyga}

Royal Institute – Havelock Town



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லதுக் குட்டி எங்கே போனீர்

லதுவே உன்புன் சிரிப்பில் உலகத்தை மறந்து நின்றோம். இனி உன் கள்ளங்கபடமற்ற சிரிப்பையும் சுந்திரவதனத்தையும் எங்கே காண்போம். உறவினர் உள்ளத்தில் நிலா போல ஒளிர்ந்தவனே. உன்னை எப்பிறவியில் இனி காண்போம் கொழும்பில் இருந்து ஒவ்வொரு தடவையும் வந்து போகும் போது சிரிப்புடனேயே இருப்பியே. ஆனால் இம்முறை ஏன் இப்படி எங்களை ஏமாற்றினாய். உன் அம்மா உன்னை எவ்வாறு அன்பும் அரவணைப்புடனும் வளர்த்தாள் ஐயா அவளை கதிகலங்க வைத்துவிட்டாயே. உன் அம்மா உனக்காக பட்ட கஸ்டங்களை வார்த்தைகளால் கூறமுடியாது. உன் சக்கர நாற்காலியில் நீ இருப்பது போன்று பிரம்மை. அப்பப்பாவை பார்க்க வந்த உனக்கு ஏன் இப்படி நடந்தது. அப்பப்பாவின் மீது கொண்ட பாசத்தை அவருடன் சென்று நிருபித்துவிட்டாய். நீயே எம் குடும்பத்தில் மீண்டும் வந்து பிறக்கவேண்டும் என்ற ஆவலுடன் உன் மீள்வருகை எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

அன்பு மிக்க
குஞ்சு, சந்திரா, சுகுணா
(அத்தைமார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர்பூக்களை காணிக்கையாக்கின்றோம்

மண்ணில் 08 . . 1953



விண்ணில் 05 . . 2015

## அமரர். திரு. சண்முகநாதன் ஆனந்தராசா

வாழ்ந்த நாட்களை வந்தமாக்கி
விட்டுச் சென்ற வசந்த மலரே!
ஊதிர்ந்தது நீங்கள் மட்டுமல்ல
உடைந்தது எங்கள் இதயமுமதான்!
நிழலில் இசைந்தாடி நினைவில் இழைந்தோடி
நெஞ்சில் உயிர்வாழும் உறவே
ஊரார் போற்ற வாழ்ந்த உத்தமனே
காலங்கள கடந்தும் பிர்ந்தாலும்
கண்ணீரை சிந்திக்கிடைக்கும் எழுத்தால்
அழுகின்றேன் என் உயிர் பெரியப்பாவே!
ஊம் பிரிவால் துடித்துபோய் இருக்கும்
எங்கள் உள்ளங்களை எவ்வாறு ஆறுதல்படுத்த முடியும்.
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்

பாசமிகுபெறாமகள்
ஆ . விதுசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு

1953 . 05 . 08



உதிர்வு

2015 . 07 . 05

## அமரர் சண்முகநாதன் ஆனந்தராசா

( சண்முகநாதன் எண்ணை மில் உரிமையாளர்)

பாசத்துடன் பழகி இன் சொல் பேசி
எல்லோரும் இன் முகம் காட்டி உத்தம
குணத்துடன்எம் மனதில் மாண்பாய் வாழ்ந்து!
நோயினிலே மறைந்ததென்ன.மகிழ்வோடு வாழ்ந்தின்று:
வானுலகம் நீர் செல்ல,உங்கள் உதிரத்தின்
உறவுகள் தவித்தே கதறியழ,உற்றமும் சுற்றமும்
உங்கள் பிரிவால் கதறுதய்யா!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பிரிவுத்துயரில்...கேதீஸ் களஞ்சியம் கல்வியங்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மலர்வு

1953 . 05 . 08



உதிர்வு

2015 . 07 . 05

(சண்முகநாதன் எண்ணை மில் உரிமையாளர்)

## அமரர் சண்முகநாதன் ஆனந்தராசா

தேற்றுவார் யாருமில்லை உம் இழப்பாலே
திகைத்துப் போய் நிற்கின்றான் - உம் மனைவி
வீற்றிருந்த இடமெல்லாம் விளக்குப் போல் ஒளிவீசி
வாழ வழிகாட்டி ஏன் மறைந்தீர் அவசரமாய் ?

அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தாருக்கு எமதுஆழ்ந்தஅனுதாபங்களைதெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்

32,இராஜ வீதி
நல்லூர் மார்கட்

பிரிவால் துயருறும்
**K.T.M Oil Mill**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

பூவுலகில்
08 . 05 . 1953



விண்ணுலகில்
05 . 07 . 2015

அமரர்

## சண்முகநாதன், ஆனந்தராசா

(சண்முகநாதன் மில்)

நித்திய புன்னகை நேர் கொண்ட பார்வை
இன்று நீள் துயில் கொள்ளுகின்றாய்..
நாங்கள் கத்தி அழைத்தாலும்
கதறி அழுதாலும் ஏனய்யா
விழிமூடி உறங்குகின்றாய்
நெஞ்சு கனத்தும் கண்கள் அழுததும்
நீர் மண்ணில் மடிந்ததும் உண்மையா...?
எட்டிப் பிடித்து அந்த சாவை நீங்கள்
இன்று கட்டி அணைத்ததும் உண்மையா ....?
பூமியில் மேவிய மெல்லிய பாதங்கள்
பாரினில் சரிந்தது நியாயமா....?
பூவினில் ஆரங்கள் தாங்கி வந்தோம் உந்தன் விழிகளை
திறந்தெம்மை பாரய்யா
உம்மை வையம் இழந்ததும் உண்மையா....?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்திக்காகப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

அமரர் குலசேகரம்பிள்ளை
பிள்ளைகள்,மருமக்கள்,பேரப்பிள்ளைகள

இராசபாத வீதி
கல்வியங்காடு 06.07.2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மண்ணில் 08 . 05 - 1953



விண்ணில் 05 . 07 - 2015

## அமரர்.திரு.வே.சண்முகநாதன் ஆனந்தராசா

(சண்முகநாதன் மில் உரிமையாளர் - செங்குத் சந்தை – நல்லூர்)

எமது மன்றத்தின் நிர்வாக உத்தியோகத்தரும்
எமது மன்ற உறுப்பினர்
திரு ஆனந்தகுமாரின் சகோதரருமாகிய
அமரர் திரு. ச. ஆனந்தராசா அவர்கள்
இறைபதம் அடைந்ததையிட்டு அவர்களின் இழப்பால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினரின்
துயரில் பங்குபற்றுவதுடன் அன்னாரின் ஆன்மா எல்லாம்வல்ல
பேத்தி அம்பாளின் பாதார விந்தங்களை
அடைந்து அமைதி பெற பிராத்திக்கின்றோம்

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

செங்குந்த சந்தை
நல்லூர்

வன்னியசிங்கம் பொதுப்பணி
மன்றத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

தோற்றம்

1953

05

08



மறைவு

2015

07

05

யாழ் கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் சண்முகநாதன் ஆனந்தராஜா

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் வழிநடத்தி
இரக்கத்திற்கு இருப்பிடமாய் ஈகை பல செய்து
எல்லோரும் நல்லவராய் நாணயமாய் நடந்தீரே
துன்புற்றோர் துயர்துடைத்து துணைக்கரமாய்
அடைக்கலம் தந்த – உம்மை
ஆண்டவன் ஏன் அழைத்தான்?
என செய்வோம் இறைவன் சித்தமிது
இனிக்காணமுடியாது சோக நிலையோடு
இங்கிருந்தே ஏங்கி அழுகின்றோம்

உமது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்

ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!

**முத்துமாரி அம்மன்
வெல்டிங் வரதன்
டிங்கர் அன் பெயின்ற்
கல்வியங்காடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்மகிழ் 08 – 05 – 1953



கண்நெகிழ் 05 – 07 – 2015

## அமரர் வே.சண்முகநாதன் ஆனந்தராஜா

(சண்முகநாதன் மில் உரிமையாளர் – செங்குந்தா சந்தை – நல்லூர்)

**கண்கள் கலங்குகிறதே**
**காற்று வீச மறுக்கிறதே**
**உன் மறைவுச் செய்தி கேட்டு**
**நெஞ்சு வெடித்து விடும்**
**போல் இருக்கிறதே**
**நேற்று வரை வாழ்ந்த வாழ்க்கை**
**இன்று பாரை விட்டு போனதேனோ?**

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**விவசாய ஆராய்ச்சி நிலையம்**
**திருநெல்வேலி**

**உத்தியோகத்தாரும்**
**ஊழியர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிநீர் அஞ்சலி

தோற்றம்

1953

05

08



மறைவு

2015

07

05

யாழ் கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட

## அமரர் சண்முகநாதன் ஆனந்தராஜா

அன்பிற்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடமை காத்து பக்குவமாய் வழிநடத்தி
இரக்கத்திற்கு இருப்பிடமாய் ஈகை பலசெய்து
எல்லோரும் நல்லவராய் நாணயமாய் நடந்தீரே
துன்புற்றோர் துயர்துடைத்து துணைக்கரமாய்
ஆடைக்கலம் தந்த — உம்மை
ஆண்டவன் ஏன் அழைத்தான்?
என்செய்வோம் இறைவன் சித்தமிது
இனிக்காண முடியாத சோக நிலையோடு
இங்கிருந்தே ஏங்கி அழுகின்றோம்

உமது பிரிவால் துயருறும் குடும்பத்திருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!

அன்னாரின் பிரிவால் துயருறும்
ரகு குடும்பத்தினர்
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 08 – 05 – 1953 |  | 05 – 07 – 2015 |

**கல்வியங்காட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட**
**(சண்முகநாதன் மில்)**

## அமரர் சண்முகநாதன், ஆனந்தராசா

**(அவர்களின் மறைவுச் செய்தி)**

கள்ளமில்லா நல்லுள்ளமும்
கனிவான நின் பார்வையும்
புன்னகை பூத்த பொன்முகமும்
அன்போடு அனைவரையும் அரவணைக்கும்
பண்பையும் உனையிழந்த போது
இனி யாரிடம் நாம் காண்போம்....?
உற்றவரும் ஊரவரும் உளம்மகிழ
போற்றுதற்குரிய பண்பாகி

எங்கள் ஊரொடு ஒன்றாகி நின்றாய்
மறுத்திடா உதவிகள் புரிந்த
நினைவுகளை நெஞ்சத்தால்
இன்று நினைத்தது பார்கின்றோம் – உம்
பிரிவுச் செய்தி கேட்டு

கலங்கி நிற்கின்றோம் இன்று... அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்ினருக்கு எங்கள் ஆழ்ந்தஅனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிராத்திக்கின்றோம்.ஓம் சாந்தி சாந்தி சாந்தி

அபி பிறிண்டர்ஸ்
சந்தை வீதி
கல்வியங்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த மருத்துவத்தில் இருந்து ஆரோக்கியமாய் வாழ சில ஆலோசனைகள்

1) உணவே மருந்து மருந்தே உணவு மருந்தை யாரும் அதிகம் விரும்புவார்களா? உணவை வாழ்வதற்காகவும் சாப்பிடலாம்.
2) பூண்டு, வெங்காயம் அதிகம் உணவில் சேர்த்து வந்தால் தேவையற்ற கொழும்பு குறையும்.
3) நார்த்தங்காய் ஊறுகாய் மலச்சிக்கலைப் போக்கி நல்ல ஜீரண சக்தியைக் கொடுக்கும்.
4) சீரகத்தை பொன் வறுவலாக வறுத்து பொடி செய்து சூரணமாக பனைவெல்லம் சேர்த்து சாப்பிட நன்கு பசி எடுக்கும்.
5) வாழைப்பட்டையை தீயில் வாட்டி சூடேற்றிப் பிழிந்து ஓரிரு துளிகள் விட காதுவலி குணமாகும்.
6) வண்டு, பூச்சி. கடிக்கு வெள்ளைப்பூடை அரைத்து கடிவா யில் கட்டி விஷம் முறியும்.
7) அன்னாசிபழம் தினம் சாப்பிட வயிற்றுப்பூச்சிகள் ஒழியும்
8) தேங்காய் பாலுடன் தேன் கலந்து குடித்தால் வாய்ப்புண் குணமாகும்.
9) பீட்ரூட் கிழங்கை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் உடல் வளர்ச்சி நன்றாக இருக்கும் நரம்பு தளர்ச்சி நாளடைவில் சரியாகும்.
10) நெல்லி மர இலையை நீரில் இட்டு காய்ச்சி வாய் கொப்பளிக்க வாய்ப்புண் தீரும்.
11) விளாம்பழம், நெல்லிக்காய் தினமும் தொடர்ந்து சாப்பிட்டு வர மருந்து, மாத்திரை ஊசி அவசியம் ஏதும் இல்லை.
12) சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு கால்களில் சிறிய புண் ஏற்பட்டால் உடனடியாக கவனித்துவிட வேண்டும்.
13) மழைக்காலங்களில் முசுமுசுக்கை இலையைச் சாப்பிட்டு வர சளி, இருமல் வர விடாமல் தடுக்கலாம்.
14) நாட்டு வாழைப்பழம் (நன்றாக பழுத்த) ஆலிப் ஆயில் சேர்த்து பிசைந்து முகத்தில் தடவி 1 மணி நேரம் கழித்து முகம் கழுவி வர முகம் பளபளக்கும்.
15) முட்டைகோஸ் சாற்றை முகத்தில் தடவி வர முகச்சுருக்கம் மறையும்
16) பொன்னாங்காணி இலையை காலையில் மென்று தின்று பால் பருகி வர கண்பார்வை தெளிவு பெறும்.
17) முருங்கைப் பிஞ்சுகளை நசுக்கி சாறு எடுத்து அந்த சாறுடன் தேன் கலந்து 2 வேளை வீதம் 3 நாட்கள் சாப்பிட ஜலதோஷம் விடுபடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18) மலர்ச்சிக்கல் சரியாக அகத்திக் கீரையை நிழலில் உலர்த்தி பொடி செய்து காலை மாலை ஒரு ஸ்பூன் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் தீரும்.

19) மலச்சிக்கல் தீர இரவில் மாம்பழம் சாப்பிடலாம்.

20) விளாம்பழம் கிடைக்கும் காலங்களில் தினசரி ஒன்று சாப்பிட்டு வர பித்தத்தை குறைக்கும்.

21) கரட், எலுமிச்சம் பழச்சாறு கலந்து தேங்காய் எண்ணெய்யில் காய்ச்சி தலைக்கு தேய்த்து வர முடி நன்றாக வளரும்.

22) தினசரி கொய்யாப்பழம் சாப்பிட்டு வந்தால், இரத்தச்சோகை அகலும்.

23) அகத்தி இலை அவித்த தண்ணீர் பருகினால் வாய்ப்புண் ஆறும்.

24) வாழைப்பூவை வேகவைத்து அல்லது பொரியல் செய்து சாப்பிட்டு வர நீரிழிவு நோய் கட்டுப்படும். அஜீரணம் அகலும்.

25) நொச்சி இலை (வெள்ளை) போட்டு நீராவி பிடிக்க கடுங்காய்ச்சல் குணமாகும்.

26) இரவில் கண்விழித்து நெடுநேரம் வேலை செய்பவர்கள் காலையில் இளநீர் தொடர்ந்து சாப்பிட 8 நாட்களில் வயிற்றுவலி தீரும்.

27) "ஏழைகளின் ஆப்பிள்" என்று சொல்லப்படும் தக்காளிப் பழம் உண்டு வர இரத்தம் சுத்தமாகி உடல் வலுப்பெறும் வாதநோய் உள்ளவர்கள் தவிர்த்தல் வேண்டும்.

28) புதிய இரத்தம் உருவாக்குவதில் பீட்ரூட் கிழங்கு வலிமையானது.

29) வெண்டைக்காய் உணவுடன் அடிக்கடி சேர்த்து வர மூளை பலமடையும். கண்களுக்கு குளிர்ச்சி தரும்.

30) எலுமிச்சை சாரில் ஊறிய சீரகத்தை உலர்த்தி பொடியாக்கி வைத்துக் கொண்டு குமட்டல் வரும் போது சுவைக்க குமட்டல் நீங்கும்.

31) எண்ணெய் தேய்த்து குளிக்கும் போது பச்சைத் தண்ணீர் சேர்க்காமல் ஒரே சூடான தண்ணீரில் தான் குளிக்க வேண்டும்.

32) போலியோ சொட்டு மருந்து தயாரித்த இடத்திலிருந்து குழந்தையின் வாயில் விழும் வரை 8 டிகிரி செல்சியஸ் குளிர்ந்த நிலையில் இருந்தால் தான் பயன்தரும்.

33) வாழைக்காய் சமைத்து உண்பதால் இரத்தம் பெருகும். அதிகம் உண்டால் வாய்வுத் தொந்தரவு ஏற்படும்.

34) சந்தனம் முகத்தில் அடிக்கடி பூசி காயவிட்டு முகம் கழுவ சூட்டினால் முகத்தில் வரும் சிறுகட்டிகள் வராது.

35) இதய நோய் உள்ளவர்கள் ரீ குடிக்கலாம். காபி தவிர்த்தல் நலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36) **சளித்தொல்லை நீங்க:** தூதுவளை செடியில் ரசம் வைத்து, சாப்பிட ஜலதோஷம் ஓடும்.

37) **தொப்பை குறைய** : சுரைக்காய், வாரம் 2 தடவை சாப்பிட்டுவர தொப்பை குறையும்.

38) **குடல் புழுக்கள் அழிய**: மாதுளம்பழம் சாப்பிட குடல் புழுக்கள் அழியும்.

39) **முதுமை அடைவதை தடுத்து, உடல்பலம்பெற**: தினம் அதிகாலை ஒரு நெல்லிக்கனி சாப்பிட்டால் உடல் பலம் பெறும்.

40) அல்சர் குணமாக தினமும் ஒரு டம்ளர் திராட்சை பழச்சாறு குடித்து வர அல்சர் குணமாகும்.

41) தூதுவளை ரசம் வைத்து மதிய நேரம் சாப்பிட்டு வர ஜலதோசம் நீங்கும்.

42) கம்பளி பூச்சி கடிக்கு வெற்றிலையை கடிவாயில் வைத்து அழுத்தி தேய்க்க குணம் பெறலாம்.

43) ஏலக்காய் பொடியை தேனில் கலந்து ஒரு நாளைக்கு மூன்று வேளை சாப்பிட்டு வர வயிற்றுவலி, வயிற்று பொருமல், அஜீரணம் குணமாகும்.

44) கண்டங்கத்தரி பழத்தை உலர்த்தி நெருப்பிலிட்டு வாயில் புகை இழுக்க பல்வலி, ஈறுவலி குணமாகும்.

45) ஒரு நாள் விட்டு ஒரு நாள் அதிகாலை வெறும் வயிற்றில் மாதுளம் பழம் சாப்பிட்டு வர பற்கள், எலும்பு உறுதியாகும்.

46) தினசரி 2 பேரீச்சம்பழம் சாப்பிட்டு, பால் சாப்பிட்டு வர குளுக்கோஸ் நேரடியாக உடலுக்கு கிடைக்கும்.

47) புளிய இலையை அவித்து சூட்டோடுசூட்டாக சுளுக்கு உள்ள இடத்தில் ஒத்தடம் தந்து கட்ட சுளுக்கு விலகும்.

48) வல்லாரை 150 கிராம், வசம்பு 15 கிராம் பவுடராக்கி தேனில் கலந்து சாப்பிட ஞாபக சக்தி பெருகும்.

49) ஆலம் விழுதை சாம்பலாக்கி நல்லெண்ணெயில் குழைத்து தடவி வந்தால் அக்கி முழுவதும் குணமாகும்.

50) வெள்ளரிக்காய் அதிகம் சாப்பிட்டு வந்தால் சிறுநீர் அடைப்பு, தைானாக விலகும்.நீர் நன்றாக பிரியும்.

51) தினசரி ஆட்டுப்பால் குடித்து வந்தால் வலிப்பு நோய் வருவதை தடுக்கலாம்.

52) **கருப்பை கோளாறு நீங்க**: அரசஇலை கொழுந்து 10 லிருந்து 20 எடுத்து அரைத்து மோருடன் பருகிவர கருப்பையில் தங்கிய அழுக்குகள், அடைப்புகள், கட்டிகள், கிருமிகள், சதை வளர்ச்சி ஆகியவை தூய்மை அடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

53) **இதயத்திற்கு பலம் கிடைக்க:** மாதுளை சாறுடன் தேன் கலந்து சாப்பிட ஈரல் இதயம் வலுவடைகிறது ஜீரண சக்தியை அதிகரிக்கும்.

54) **காய்ச்சல் குணமாக:** வேப்பிலையை வறுத்து சூட்டோடு தலைக்கு வைத்து தூங்கினால் காய்ச்சல் நீங்கும். நிம்மதியான தூக்கம் வரும்.

55) **வெறி நாய்கடி குணமாக** : நாயுருவி வேரை அரைத்து கோலி அளவு உருட்டி 15 நாட்கள் சாப்பிட வேண்டும்.

56) **கல்லீரல், மண்ணீரல் நோய் குணமாக** : விளாம்பழ மரத்தின் பட்டையை கஷாயம் செய்து சாப்பிடவும். விளாம்பழ ஓட்டை தூள் செய்தும் கஷாயம் செய்யலாம். விளாம்பழம் தொடர்ந்து சாப்பிட்டு வர கல்லீரல் நோய் குணமாகும்.

57) **முடி உதிர்வதை தடுக்க:** வேப்பிலை 1 கைப்பிடி எடுத்து நீரில் வேகவைத்து ஒரு நாள் கழித்து மறுநாள் வேகவைத்த நீரை கொண்டு தலைமுழுகி வந்தால் முடி கொட்டுவது நின்றுவிடும் பேன் நீங்கும்.

58) **தேள்கடி விஷம்** : நாயுருவி வேரை பச்சையாக மென்று சாறை உட்கொண்டால் தேள்கடி விஷம் நீங்கும்.

59) **வயிற்று போக்கு குணமாக** : மாதுளம் பழத்தை வேக வைத்து சாறு எடுத்து தேனுடன் கலந்து உண்டால் எல்லாவகையான வயிற்றுப் போக்கும் குணமாகும்.

60) **உடல் பலவீனம் நீங்க:** பப்பாளிப்பழம் தொடர்ந்து சாப்பிட்டு வர உடல் பலவீனம் நீங்கிட உதவும்.

61) **இளநரை கருப்பாக** : நெல்லிக்காய் அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் இளநரை கருமை நிறத்திற்கு மாறும். நெல்லிக்காய் ஊறுகாய், நெல்லி வற்றல் சாப்பிடலாம்.

62) **தொற்றுநோய் வராமல் தடுக்க:** செவ்வாழைப்பழத்தை தேனில் அரை மணி நேரம் ஊறவைத்து சாப்பிட்டு வர தொற்று நோய் அணுகாது உடல் ஆரோக்கியம் பாதுகாக்கப்படும்.

63) **குடல் பூச்சி:** மாங்கொட்டை பருப்பை காய வைத்து பொடியாக்கி ஒரு சிட்டிகை தேனில் குழைத்து 1 நாள் 2 வேளைக்கு கொடுக்க பூச்சி அகலும்.

64) **கருவுற்ற தாய்மார்கள்** : கருவுற்ற தாய்மார்கள் சாப்பிட சிறந்த பழம் மாம்பழம்

65) **தேனி கொட்டினால்** : தேனி கொட்டினால் பழைய புளி, சுண்ணாம்பு சேர்த்து பிசைந்து அதை கொட்டு வாயில் அழுத்தி ஒட்ட வைத்துவிட்டால் கடுப்பு நின்று விடும்.

66) **இரத்தத்தில் உள்ள கிருமிகளை ஒழிக்க** : அடிக்கடி விளாம்பழம் சாப்பிட்டு வர இரத்தில் உள்ள கிருமிகளை அழிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

67) **சுறுசுறுப்பாக இருக்க** : ரோஜாப்பூ இதழ்களை சாப்பிட்டு வர சுறுசுறுப்பு பெறலாம்.

68) சிறுநீரில் உள்ள கற்களை அகற்ற : மாதுளம்பழத்தின் விதைகளை சாப்பிட கொடுக்க நல்லபலன் கிடைக்கும்.

69) **அல்சர் நோய் குணமாக** : குடல் வெந்து ஓட்டை விழுவது தான் அல்சர் ஆகும். அல்சர் கண்டவர்கள் தினமும் ஒரு டம்ளர் திராட்சை பழச்சாறு குடித்து வர அல்சர் குணமாகும்.

70) **இரத்தக்குழாய் அடைப்பு நீங்க** : தினம் ஒரு கப் தயிர் சாப்பிட்டு வர இரத்த குழாய்களில் ஏற்படும் அடைப்பு நீங்கும்.

71) **காலில் குத்திய முள்எடுக்க**: சிறிய முள்ளை எடுக்க கள்ளிப்பால் அல்லது எருக்கன் பால் தடவ முள் வெளியேறும் அல்லது மக்கிவிடும்

72) **கர்ப்பிணி பெண்கள்** : கர்ப்பிணி பெண்கள் தினசரி 2 நெல்லிக்காய் சாப்பிட்டு வர சிறந்தது. வயிற்றில் உள்ள குழந்தைகளுக்கும் சிறந்த டானிக்காக பயன்படுகிறது.

73) **பற்கள் ஆடுவதை தடுக்க** : பற்கள் ஆடும் போது ஆலம் பாலையை பற்கள் மிது தடவினால் பற்கள் கெட்டிப்படும்.

74) எலுமிச்சம் பழ சாறு 4 துளி காதில் விட காது வலி தீரும்.

75) எலுமிச்சை பழசாறு, கரிசலாங்கன்னி சாறு, பால் நல்லெண்ணையில் கலந்து காய்ச்சி தலைமுடிக்கு 6 மாதம் தடவி வர நரைக்காமல் நீண்டு வளரும்

76) **முகவசீகரம்** :- சந்தனக்கட்டையை எலுமிச்சை சாறில் உரைத்து பூசலாம்.

77) **உடல் சிவப்பாக மாற** :- வெள்ளரிக்காய், மஞ்சள். வேப்பம்பூ சேர்த்து அரைத்து உடலில் பூசி குளித்துவர குணமாகும்.

78) **போலியோ சொட்டு மருந்து** :- தயாரித்த இடத்திருந்து குழந்தையின் வாயில் விழும் வரை 8 டிகிரி செல்சியஸ் குளிர்ந்த நிலையில் இருந்தால்தான் பயன்தரும்.

79) **குழந்தைகளுக்கு நோய் வராமல் தடுக்க** :- வசம்பு இலை, மஞ்சள் சேர்த்து அரைத்து தேய்த்து குளிக்கலாம். மேனி அழகுபெறும்.

80) **சுகப்பிரசவம் ஆக** : ஆப்பிள்பழம், தேன், ரோஜா இதழ், குங்குமப்பூ, ஏலக்காய் ஆகியவை ஒருமாதம் தொடர்ந்து சப்பிட்டு வரலாம்.

81) **வெட்டுக்காயம் குணமாக** :- இலந்தை மரத்தின் இலையை மைய அரைத்து காயத்தின் மீது கட்டலாம்.

82) **இதயம் பலமடைய** :- அத்திபழம் தொடர்ந்து சாப்பிடலாம்.

83) **நெஞ்சுவலி** :- இலந்தைபழம் சாப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

வாழ்க்கை ஒரு சவால் - அதைச் சந்தியுங்கள்
வாழ்க்கை ஒரு பரிசு - அதை ஏற்றுக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒருசாகசப்பயணம் - அதனை மேற்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் - அதனைக் கடந்து வாருங்கள்
வாழ்க்கை ஒரு துயரம் - அதனைத்தாங்கிக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு கடமை - அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு வினோதம் - அதனைகண்டறியுங்கள்
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் - அதனைபயன்படுத்திக் கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு பயணம் - அதனைத் தொடருங்கள்
வாழ்க்கை ஒரு காதல் - அதனை அனுபவியுங்கள்
வாழ்க்கை ஒரு உணர்வு - அதனை உணர்ந்து கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு குழப்பம் - அதற்கு விடை காணுங்கள்
வாழ்க்கை ஒரு இலக்கு - அதனை எட்டிப்பிடியுங்கள்

# பொன்மொழிகள்

1) சரியானது இது என்று உணர்ந்தும் பின்பும் அதைச் செய்யாமல் இருப்பது தான் மகா கோழைத்தனம் (கன்பூசியன்)

2) உங்களை நீங்களே மதித்துக் கொள்வது ஆவணம் பிறர் உங்களை மதிப்பது பெருமை (ஸ்டீவன்சன்)

3) காலத்தின் மாறுதல்கள் தான் மனிதனின் உள்ளத்தில் மாறுதல்களை ஏற்படுத்துகின்றன. (எமர்சன்)

4) நான் அடிமையாக இருக்க மாட்டேன் ஆகவே நான் எஜமானாகவும் இருக்க மாட்டேன். இதுதான் ஜனநாயக கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவம் (ஆபிரகாம்லிங்கன்)

5) எந்த மனிதனுடைய இதயத்தை வேண்டுமானாலும் அலசிப் பாருங்கள் பிறரிடமிருந்து ஒழிக்கப்பட வேண்டிய ஒரு இருட்டுப் பகுதியாவது அங்கே இருக்கும் (இப்சன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகள் ...



எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி கேட்டு உடனே உதவி புரிந்தவர்களுக்கும் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபோது இருவருக்கும் வைத்திய உதவி செய்த வைத்தியர்களுக்கும் மற்றும் சக ஊழியர்களுக்கும் மற்றும் வைத்தித்தாதி சாந்தி, பிரசன்னா அவர்களுக்கும் PLC உத்தியோகத்தர்களுக்கும், அந் நேரத்தில் வாகன உதவி செய்த ஜெராட் ஆகியோருக்கும் ஆறுதலும் தேறுதலும் கூறி எமக்கு அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு எமது துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் அன்னாரின் இறுதிக் கிரியையிற் கலந்து கொண்டு கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களை அச்சிட்டு வெளியிட்டோருக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் ஈமக்கிரியைகள், அந்தியேட்டி சபீண்டீகரணக் கிரியைகள் சிறப்புற உதவி செய்தவர்களுக்கும் கிரியைகளை ஆற்றிய அந்தண அறவோருக்கும் ஆன்ம ஈடேற்றத்தில் கலந்துகொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் இவ் நூலை எழுத உதவிய பெரியோர்களுக்கும் இவ் நூல்களை சிறப்பாக அச்சிட்டுத் தந்த “அபி” அச்சகத்தினருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள் உரித்தாக்குக.

குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சக்கொடி

கார்த்திகேசு + நாகம்மா

செல்வநாயகம் மோகனாம்பிகை யசோதாம்பிகை தயாபரன் கேதீஸ்வரன் சிவயோகம்

(ஜேர்மனி) (கனடா)

கீர்த்தி

✿

லதுமி

✿

டிசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க்கொடி

ஆனந்தராசா + இந்திராதேவி

ன் சிவயோகம் ஞானச்சந்திரன் பிரதாம்பிகை மீரா அகிலன் கஜன்

(அவுஸ்ரேலியா) (இந்தியா) (ஜேர்மனி)

கீர்த்திகா

✡

லதுமிலன் (அமரர்)

✡

டிசான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்ச

சண்முகநாதன் + பாக்கியம்

(அமரர்) ஆனந்தராசா

ஆனந்தகுமார்

சுபத்திரா

சித்திரா

ஆனந்தநாதன்

சந்திரா

சிவகுருநாதன்

தங்கலெஷ்மி

கந்தசாமி

வடிவாம்பிகை

ஞானேஸ்வரி

பொன்னையா

மீரா

தயாபரன்

கீர்த்திகா

லதுமிலன் (அமரர்)


டிசான்

அகிலன்

அனுசூயா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ம்ச விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக்கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றவருடயதாகிறது,
மற்றொருநாள்
அதுவே வேறொருவருடையதாகும்.
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org